# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 8-5-49 | இதழ் 45


## துணிவு கொண்டேன்!


மு. சென்னியப்பன்


அன்றொருநாள் அந்தி மணிஐந் திருக்கும்.
ஆறடுத்த மணல்வெளியில் நானமர்ந் திருந்தேன்.
குன்றடுத்த கொடிக்காலும், பள்ளர் வாழும்
குடிசைகளும், என்முன்னே அழகாய்த் தோன்ற;

கொடிக்காலில் இலைகிள்ளும் ஏழை மக்கள்,
கோவைபடத் தம்கருத்தை இசையின் மூலம்
கடினமிலாத் தெம்மாங்கில் காற்றில் தூவிக்
கணப்பொழுதில் எனைஅவர்தங் கருத்தில் சேர்த்தார்.

"ஏழையெலாம் இந்நாட்டில் இன்றே போல
இனிமேலும் இருந்திட்டால் துன்பம் மல்கும்
பேழையிலே கருத்தூன்றிப் பணந்திரட்டும்
பெருஞ்செல்வர் ஆதிக்கம் பெருத்துப் போகும்"

என அவர்கள் இசைபாடி இலைகள் கிள்ள,
என்னையும் நான் அறியாமல் கருத்தாழ்ந்தேன்
மனம் போன போக்காகப் போனால் கொஞ்சம்
மனவமைதி பெறுமென்றே வழியே நடந்தேன்.

வரும்வழியில் நான்கண்ட மற்றோர் காட்சி
மனம்விட்டுச் சொன்னாலும் வெட்கம் வெட்கம்
பெரும்பாரந் தூக்கிநடந் திடுப்பு நோக
பிணியுற்றான் ஓர் உழவன் உணவுமின்றி.

எலும்பெல்லாம் மேல்தோலைத் தூக்கிக்கொண்டு
இப்படியும் மனிதவுடல் இருக்குமென்று
பலதரமிப் பாரோர்க்குச் சொல்லல் போலப்
பலிப்பொருளாய்க் காணுகின்றான் உழைப்பின் மேதை.

உழைத்தவனால் உண்டாக்கப் பெற்ற செந்நெல்
உழையாத ஒருவனுக்கு முறையாய்ச் சேரும்
பழைமையெலாம் நான் கேட்டேன் நேரிற் பார்த்தும்
பழைமைமுறை ஓட்டிவிடத் துணிவு கொண்டேன்!

# நான் கண்ட அழகர்சாமி

தொடர்ச்சி—3

எஸ். வி. லிங்கம்

முதல்தடவை சட்டசபைத்தேர்தலுக்கு நின்ற தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் நமது கட்சியின் ஆதரவால் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது முறை சட்டசபைத் தேர்தல் வந்தது. சண்முகம் அவர்களுக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் போட்டிகள் இருந்தன. தேர்தல் நடப்பதற்குப் பலநாட்களுக்கு முன்னரே, நான், டில்லிச் சட்டசபைத் தலைவராக இருந்த சண்முகம் அவர்களுக்கு, காங்கிரஸ்காரரின் சூழ்ச்சிகளைப் பற்றியும், நமது கட்சியில் சண்முகம் அவர்களுக்கு விரோதமாக உள்ளவர்களைப் பற்றியும் கடிதம் எழுதினேன். இந்தச் சமயங்களில் எல்லாம் அழகர்சாமி என்னை ஏளனம் செய்வார். தேர்தலுக்கு இரண்டு மாசத்துக்கு முன்பு அடையாறுக்குப் போயிருந்தோம். செட்டிநாட்டில் பிரசாரம் செய்வது பற்றியும், தேர்தல் பற்றியும் மறைந்த ராஜா அண்ணாமலைச் செட்டியார் அவர்களிடம் பேசினோம். அவர் எங்களை ஊட்டிக்கு வரும்படிசொன்னார். அடுத்த மாசத்தில் நாங்கள் ஊட்டிக்குச் சென்றோம். அப்போதுதான் சண்முகம் அவர்கள் டில்லியிலிருந்து கோவைக்கு வந்திருந்தார். சண்முகம் அவர்களைப் பார்ப்பதற்கு அழகர்சாமி விரும்பவில்லை. நான் மட்டும் போய்ப் பார்த்துப் பேசினேன். அதன் பின்னர் நாங்கள் இருவரும் ஊட்டிக்குச் சென்று இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தோம். அந்தச் சமயம் தோழர் T. V. சுப்பிரமணியம் அவர்கள் அங்கிருந்தார். நாங்கள் சட்டசபைத் தேர்தல் சம்பந்தமாகப் பிரசாரம் செய்யவேண்டிய முறைகளைப்பற்றிக் கேட்டுக்கொண்டு புறப்பட்டோம். தேர்தல் செலவுக்காகப் பேங்கில பணம்வாங்கும் "கடுதாசி" எங்களிடம் கொடுக்கப்பட்டது. அதை அங்கேயே பணமாக்கிக் கொண்டு புறப்பட்டோம். எப்போதுமே, நூறுரூபா நோட்டுக்களாக இருப்பதை அழகர்சாமியிடம் கொடுப்பேன்; சில்லரைநோட்டுக்கள் எவ்வளவிருந்தாலும் நானே வைத்துக்கொள்வேன். நாங்கள் ஊட்டியிலிருந்து கோயமுத்தூருக்கு வந்து, தோழர் எம். எம். சங்கரலிங்கம் அவர்கள் வீட்டில் தங்கினோம். தோழர் அழகர்சாமி, "ஊட்டி சென்று வந்தோமே, சண்முகம் அவர்களின் தேர்தல்பற்றி என்ன நினைக்கிறாய்" என்று என்னிடம் கேட்டார். "சண்முகம் அவர்களைக் குமாரராஜா ஆதரிக்கிறார். அவருடைய தொகுதியில் அதிக ஓட்டுகள் உள்ளன. கோவையும் செட்டிநாடும் சரியாக ஓட்போட்டால் சண்முகம் வெற்றிபெற்றுவிடுவார்" என்று நான் சொன்னேன். அதற்கு, "முட்டாளே! அடையாறு, சண்முகம் பக்கம் திரும்பும் என்று எண்ணுகிறாயா" என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "அடையாற்றார் உன்னைக் கேட்ட கேள்விகளிலிருந்து, அவர் சண்முகம் அவர்கள் பக்கம் இல்லை என்பது தெரிகிறது" என்று அழகர்சாமி சொன்னார். இதனால் எங்கள் இரண்டு பேருக்குமிடையே பொருத்த உரையாடல் நடந்தது. கடைசியாக, நடந்த நிகழ்ச்சிகள், கேள்விப்பட்ட செய்திகள் எல்லாவற்றையும் ஒன்றாக்கிப் பார்த்ததில், தேர்தலில் சண்முகத்தை அடையாறு கைவிடப்போகிறது என்றே தெரிந்தது. அதன் பின்னர், கோவையிலுள்ள கட்சித் தோழர்கள் சிலருடன் சண்முகம் அவர்கள் வீட்டுக்குச் சென்றோம். தேர்தல் சம்பந்தமாகப் பேசினோம். தோழர் சண்முகம் அவர்கள்எங்களிடம் ஓட்டர் பட்டியல் (லிஸ்ட்) இரண்டு செட்டுகளைக் கொடுத்து, தேர்தலில் அந்தந்த இடங்களுக்குத் தக்க நபர்களை நியமித்திருப்பதாகவும், அங்கெல்லாம் எங்களால் முடிந்ததைச் செய்யும்படியும், வெற்றி நிச்சயம் கிடைக்கும் என்ற முடிவோடு இருக்கும் அபேட்சகர்போல் எங்களிடம் பேசினார். அந்தச்சமயத்தில், தோழர் அழகர்சாமி, சண்முகம் அவர்களைப்பார்த்து, "தேர்தலுக்கு நீங்கள் கூறிய யோசனைகள் எல்லாம் சரிதான்; ஆனால், செட்டிநாட்டுக்கும் உங்களுக்கும் ஏதாவது அபிப்பிராயபேதம் உண்டா" என்று கேட்டார். சண்முகம் அவர்கள் கேலியாகச் சிரித்துவிட்டு, "வேடிக்கையான கேள்வி அழகர்சாமி!" என்றார். அழகர்சாமிக்குக் கோபம் வந்தது—அதாவது இவ்வளவு ஏமாந்தவராக நமது தலைவர் இருக்கிறாரே என்ற காரணத்தால். பின்னர் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டுபேரும் பேசிக்கொண்டார்கள். தோழர்பழனிச்சாமி அவர்கள் இடையிடையே குறுக்கிட்டு அழகர்சாமியின் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தும் முறையில் தெலுங்கில் பேசினார். முடிவாக, சண்முகம் அவர்கள், செட்டிநாட்டு ராஜா தன்னைத்தான் ஆதரிக்கிறார் என்றும், அதோடு சாமி வெங்கிடாசலம் அவர்கள் தேர்தலுக்கு நிற்கப்போவதை மீண்டும் புனராலோசனை செய்யப்போகிறார் என்றும், தேர்தல் பெரும்பாலும் நடக்காதென்று தாம் எண்ணுவதாகவும் சண்முகம் அவர்கள் கூறினார். இவை எல்லாம் எங்களுடைய சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகக் கூறப்பட்டதேயன்றி, உண்மையிலேயே அவருக்கே சந்தேகமாகத்தான் இருந்திருக்கும்.

சண்முகம் அவர்கள் தம்முடைய காரியதரிசியைக் கூப்பிட்டு, பிரைவேட்பயிலைக்கொண்டுவரச்சொல்லி,

அதில், நான்கு நாட்களுக்கு முன் சாமி வெங்கிடாசலம் அவர்கள் எழுதியிருந்த கடிதத்தை எடுத்துப் படித்துக்காட்டினர். அதில், தான் செட்டிநாட்டாரைச் சந்தித்ததாகவும், செட்டிநாட்டு ஓட்டுக்கிடைக்காவிட்டால், தான் தேர்தலில் தலையிடுவதா இல்லையா என்பதைப் புனராலோசனை செய்து வருவதாகவும் விரைவில் சந்தித்துப்பேசுவதாகவும் எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்து முடித்ததும் அழகர்சாமி தவிர, மற்ற அனைவரும்சிரித்தோம். ஏனென்றால் போட்டி அபேட்சகரே இப்படிக்கடிதம் எழுதியிருக்கும் போது சண்முகம் அவர்கள் ஏன் பயப்படவேண்டும் என்று! சிறிது நேரம் சென்று, நிதானமாக அழகர்சாமி, “இக்கடிதத்தை இந்தமாதிரி எழுதும்படி செட்டிநாட்டு ராசாவே சாமி வெங்கிடாசலம்அவர்களுக்குச் சொல்லி அதன்படி எழுதப்பட்டதாக ஏன் இருக்கக்கூடாது” என்று கூறினர். ஆனால்,அதைச் சண்முகம் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

தேர்தல் வந்தது. எங்கள் இரண்டுபேருடன் இன்னும் நாலைந்து சந்தேகப் பேர்வழிகளும் சேர்ந்தார்கள். சட்டசபைத் தேர்தலுக்காகச் சென்னைக்கு வரும்படி கட்சிக் காரியாலயத்திலிருந்து எங்களுக்குக் கடிதம் வந்தது. நாங்கள் வேலை செய்வது ஆற்காட்டு இராமசாமி அவர்களுக்கு. ஜாகை, சாப்பாடு, கார் யாவும் அடையாற்றில்தான். அக்காலத்தில் குமாரராஜாவின் காரியதரிசியாகத் தோழர் டி. வி. சுப்பிரமணியம் இருந்தார். தமிழில் எழுதுவதிலும் பேசுவதிலும் கெட்டிக்காரர் அவருக்கு சண்முகம் அவர்களிடம் பற்றுதல் உண்டு. அவ்வப்போது தேர்தல்சம்பந்தமாகஅழகர்சாமியும் சுப்பிரமணியமும் ஆங்கிலத்தில் பேசிக் கொள்வார்கள். பெரியாருக்கும்; சண்முகம் அவர்களுக்கும் இது சம்பந்தமாகத் தக்கவர்களைக் கொண்டு எச்சரிக்கை செய்துவந்தார்கள். இதில் தோழர் எஸ். குருசாமி அவர்களுக்கும் பங்குண்டு. அவர்கள் நிலைமையில் அவ்வளவுதான் செய்யமுடியும். முடிவாக, ஆற்காட்டு இராமசாமி அவர்களும் சண்முகம் அவர்களும் தோற்றார்கள்.

ஜஸ்டிஸ்கட்சித் தேர்தல் சம்பந்தமாக மூன்று மாசம் சென்னையில் இருந்தோம். சாப்பாடு, பிரயாணச் செலவு முதலான வகையில் ரூபா... ஐந்நூறுக்கு மேல் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. மறைந்த பண்டித முத்துச்சாமி அவர்களைத் தன்னுடைய முயற்சியால் ஆற்காட்டு இராமசாமி அவர்களுக்காக வேலை செய்யும்படி அழகர்சாமி ஏற்பாடு செய்தார். அதற்குமுன் அவர் நல்ல சம்பளம் பெற்றுவந்தார்.

நிலைமை இப்படியிருக்க, தேர்தலில் தோற்ற இருவரின் கையாட்கள் ஈரோட்டுப்பெரியார் தலையிட்டதால் தான் தோல்வி ஏற்பட்டதென்றும், இன்னும் பலவிதமாகவும் பேசி வந்தார்கள்.

ஒரு நாள் காலையில், மவுண்ட் ரோட்டில் போய்க்கொண்டிருந்தோம். தோழர் டி. வி. சுப்பிரமணியம் அவர்கள் வந்த கார் எங்கள் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. எங்களையும் காரில் ஏற்றிக் கொண்டு தம்முடைய வீட்டுக்குப் போனர். தேர்தல் சம்பந்தமாகப் பேசினர். சாப்பாடு முடிந்ததும் தேர்தல் சம்பந்தமாகப் பட்ட கடன் தொல்லைகளை அழகர்சாமி சுப்பிரமணியத்திடம் சொன்னர். “என்னுடைய கஷ்டத்தைச் சொல்ல யார் இருக்கிறார்கள்” என்று சுப்பிரமணியம் கூறிவிட்டு, நூறு பத்து ரூபா நோட்டுக்களை அழகர்சாமியிடம் கொடுத்து, காரையும் கொடுத்து, “நீ கொடுக்கவேண்டிய கடன் முழுவதையும் தீர்த்துவிட்டு ஊருக்குப் போய்ச் சேர்” என்று கூறினர். பண்டித முத்துசாமி அவர்களுக்கும் ஏதாவது பணம் கொடுப்பதாகச் சொன்னர். அன்று நாங்கள் ஊருக்குப் புறப்படவில்லை.

* * *

மூன்று நாட்கள் கழித்து அடையாறுக்கு அழைக்கப்பட்டோம். தேர்தலில தோற்றுப்போன இருவரும் குமாரராஜாவிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். மாலையில் நாங்கள் நால்வரும் இராஜா சர் அவர்களைக் கண்டு பேசினேம். பொப்பிலி அவர்களுக்குச் செட்டி நாட்டாரிடம் கோபமென்றும், சண்முகம், இராமசாமி ஆகியவர்களின் தோல்விக்குச் செட்டி நாட்டார்தான் காரணம் என்று பொய் சொல்லித் தங்கள்மீது பொதுமக்கள் கோபம் கொள்ளும்படி செய்யப் பார்க்கிறார்கள் என்றும் பேசப்பட்டன. ஆளுக்குக் கொஞ்சமாக நாங்கள் இருவரும் ஆமாம் என்றோம். அதன் பின்னர் தோழர் சுப்பிரமணியம் வீட்டுக்கு வந்து, இரவு முழுதும் பேசிக் கொண்டிருந்தோம். அதாவது, பொப்பிலி ராஜா, அடையாறு ராஜா மீது பாய்கிறார்; இதற்கு ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும், பெரியாரும் ஆமாம் போடுவார்கள்; இவ்விதமான அக்ரமங்கள் இனியும் நடைபெறப் போகின்றன. இப்படிப்பட்ட பொய்ப் பிரசாரங்கள் வளரவிடாமலும், செட்டி நாட்டார்மீது பொப்லி தூவும் தூசுகளைச் சுத்தப்படுத்தும் பொறுப்பும் தங்கள்மீது வீழ்ந்துவிட்டதாகத் தோழர் சுப்பிரமணியம் அழகர்சாமியிடம் அன்றிரவு முழுதும் பேசிக்கொண்டிருந்தார்.

அழகர்சாமி சுப்பிரமணியத்தை நோக்கி, “தோழனே! உனது கருத்துக்கு உட்படுகிறேன்; உன்னை ஆதரிக்கிறேன்; ஆனால் நீ நினைக்கிற நினைப்பின்படி நடக்காதே! இன்றோ நாளையோ பெரியார் தலைமையில் பொப்லியின் படை புறப்படும். இதை எதிர்க்க அடையாறுக்கு சக்தி உண்டு. இதில் எங்களைப் பலியிட நீ எண்ணுகிறாயே! இது நியாயமா?” என்று கேட்டார். அதற்குத் தோழர் சுப்பிரமணியம், “அழகர்சாமி! உன்னுடைய நிலைமை நான் உணராமல் இல்லை; நீயோ, லிங்கமோ பெரியாருக்கு விரோதமாக வரமுடியாது. இதை நான் நன்குணர்வேன்; நீங்கள் இருவரும் அவர்களுடன் சேராதீர்கள்; என்னுடன் இருங்கள்” என்றார். யோசித்துப் பதில் சொல்லுவதாக அழகர்சாமி சொன்னர். இவற்றையெல்லாம் அப்போது ஹோம் மெம்பராக இருந்த பன்னீர்ச்செல்வம் அவர்களிடம் அழகர்சாமி சொன்னர். பன்னீர்ச் செல்வம் அவர்கள் பெரியார் பக்கம் இருப்பதால் நம்முடைய கட்சிக்குப் பலம் அதிகம் உண்டாகும் என்ற நம்பிக்கை அழகர்சாமிக்கு உண்டு. எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும், அழகர்சாமி தன்னுடைய கொள்கைகளை யாருடைய தயவு தாட்சண்யத்துக்காகவும் விட்டுக் கொடுக்காமல் பணியாற்றி வந்தார்.

(தொடரும்)

# ஆரிய-திராவிட இரத்தக் கலப்பு!

(24—4—49—தொடர்ச்சி)

"தினமணி" நிருபர், தம்முடைய எண்ணம் கைகூடி வராமற் போகவே, இராமாயணத்தையாவது உண்மையான சரித்திரம் என்று தோழர் லூயிடுமோண்ட் வாயினால் சொல்லும்படி செய்துவிடலாம் என்று கருதி,

> "கன்னியா குமரிக்குத் தெற்கே நிலம் இருந்ததாகவும், பின்னர் அதைக் கடல் கொண்டதாகவும், அங்கிருந்து வெளியேறிவந்த மக்கள்தான் மதுரையையும் பாண்டிய நாட்டையும் உண்டாக்கினர் என்றும், இராமாயண காலத்தில் திருச்சிராப்பள்ளிவரை பெருங்காடாக இருந்ததென்றும், இராவண இராச்சியம் இங்கு இருந்ததாகவும், இராவணன் படையில் படைத் தலைவனாக இருந்த திரிகிரஸ் என்பவனின் பெயரினால் தான் திருச்சிராப்பள்ளிக்குத் திரிசிரபுரம்என்றுபெயர் ஏற்பட்டதென்றும் கூறப்படுகிறது. இது பற்றி உம்முடைய அபிப்பிராயம் என்ன"

என்று கேட்டிருக்கிறார்.

இராமாயணத்துக்கு உயர்வும், நிலைபேறும் உண்டாக்க முயன்ற 'தினமணி' நிருபர்,இராவணனுடைய படைத் தலைவனுக்கு உயர்வு கற்பிப்பதன் வாயிலாகவாவது தம்முடைய எண்ணத்தை நிறைவேற்றி மகிழலாம் என்று கருதித், திரிசிரபுரம், திரிகிரஸ் என்ற இராவணனின் படைத் தலைவன் பெயரின் நினைவாக ஏற்படுத்தப்பட்டதென்று கூறினால், அது ஒருவேளை ஒப்புக்கொள்ளப்படும் என்றும், அப்போது இராமாயணம் உண்மையான சரித்திரம் என்பது நிலைநாட்டப்பட்டுவிடும் என்றும் கருதி இவ்விதம் கேட்டிருக்கிறார் என்று தெரிகிறது.

இராம—இராவணப் போர் உண்மையா அல்லது பொய்யா என்பது பற்றி நாம் ஆராயவில்லை. ஆனால், இராம — இராவணப் போர் நடந்திருந்தால், இராமன், இராவணனிடம் நடந்துகொண்ட முறை சரியல்ல—நீதிக்கும் நெறிக்கும் புறம்பானதென்பதே நம்முடைய கருத்தும் முடிவுமாகும்.

திரிகிரஸ் என்பவன் பெயரால், திரிசிரபுரம் என்ற பெயர் ஏற்பட்டதா? அல்லது வேறு காரணத்தால் அந்தப் பெயர் ஏற்பட்டதா? திரிகிரஸ் என்பவன் பெயரால்தான் அப்பெயர் ஏற்பட்டதென்றால், அது எப்படிப் பொருத்தமுடையதாகும் என்பனபற்றித் தனியான ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவேண்டும். எனவே அது குறித்த முடிவு ஒன்றும் இப்பொழுது கூற நாம் விரும்பவில்லை.

எனவே, இராமாயணத்தை உண்மையான சரித்திரம் என்று தோழர் லூயி டுமோண்ட் அவர்களைக் கூறும்படி செய்யலாம் என்று 'தினமணி' நிருபர் எடுத்துக்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை என்பதையே இங்கு எடுத்துக்காட்டுகிறோம். அந்த நிருபர் கேட்ட கேள்விக்குத் தோழர் லூயிடுமோண்ட் அவர்கள்,

> "மனித சாதி உற்பத்தியாவதற்குக் கூறப்படும் "ஆதம்—ஈவ்" என்ற கதை எப்படிக் கற்பனையோ அப்படியே இராமாயணமும் கற்பனை என்றுதான் நான் கருதுகிறேன். இப்பிரச்சினை பற்றிய மேற்கத்திய நிபுணர்களின் கருத்துக்களுக்கும், தமிழ் நிபுணர்களின் கருத்துக்களுக்குமிடையே பெரிதும் வேறுபாடு இருக்கிறது. சரித்திரத்தின் தொடக்கம் என்று கூறப்படுவனவற்றில் பல விஷயங்கள் கற்பனை"

என்று பதில் கூறியிருக்கிறார். இராமன் நடத்திய அரசியல் முறையைப் பின்பற்றி, இராம இராச்சியம் என்ற பெயரோடு அரசாங்கத்தை நடாத்தி வரும் இந்நாளில், இராமராச்சியத்துக்கு அடிப்படையாக இருக்கும் இராமாயணத்தையே கற்பனை என்று கூறினால் எப்படியிருக்கும் இராம இராச்சியப் பிரியர்களுக்கு! ஏன் இந்த லூயி இப்போது இங்கு வந்தார் என்றுகூட எண்ணத் தோன்றும். என்ன செய்வது? அவரோ ஒரு ஆராய்ச்சியாளர். திராவிடர் கழகத்தார் யாராவது இவ்விதம்கூறியிருந்தால், "திராவிடர் கழகத்தாரின் தெகிடுதத்தம்" என்று தலைப்புக் கொடுத்துக் கண்டிக்கலாம். கருத்தோடு கண்டிக்க முடியாவிட்டாலும், எதை எப்படிச் சொன்னாலும் கண்ணை மூடிக்கொண்டு நம்பும் மக்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தால், எதையாவது உளறிக் கொட்டலாம். ஆனால், இராமாயணத்தைக் கற்பனை என்று கூறியவர் இராம இராச்சிய அன்பர்களாலும் பாராட்டி வரவேற்கக் கூடிய ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர். எனவேதான் 'தினமணி' நிருபர் தம்முடைய கேள்வியை வேறு பக்கமாகத்திருப்பி அதன் வாயிலாகவாவது திருப்தி அடையலாம் என்று கருதித்,

> "திராவிட நாகரிகம் என்பதாக ஒன்று உண்டா?"

என்று கேட்டிருக்கிறார். அதற்கு அவர்,

> தமிழர் நாகரிகம் கி. பி. முதல் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்திருந்தது என்று கூறலாம். இதைத் திராவிட நாகரிகம் என்று கூறமுடியாது. இதைத் 'தமிழர் நாகரிகம்' என்பது தான் பொருந்தும். வங்காளிகளையும், நேபாளிகளையும் மங்கோலியர் வம்சம் என்று கருதுவது போல் தென்னிந்தியரைத் திராவிடரின் வம்சம் என்று கருதலாம்"

என்பதாகப் பதில் கூறியிருக்கிறார். நாமும் இதனைத்தான் கூறி வருகிறோம். தமிழ் மக்கள் கி. பி. முதல் நூற்றாண்டுக்கு மிக முற்பட்ட

(13-ம் பக்கம் பார்க்க)

# வளம் இருக்கிறது—வகை இல்லை

திராவிடம் நீர்வளம், நிலவளத்தை மட்டும் தன் இயற்கைச் சொத்தாகக் கொண்டிருக்கவில்லை. பல்வேறு வகைப் பொன்வளத்தையும் தன்னுள்ளே ஏராளமான அளவுக்குப் பதுக்கிக் கொண்டிருக்கிறது. மண்வளத்தையும், பொன் வளத்தையும், புனல் வளத்தையும் கொண்டிருந்தாலும், போதுமான அளவுக்கு மக்களின் மன வளம் உருவாகாத காரணத்தால், செல்வங் கொழிக்க வேண்டிய திராவிடத்தில், வறுமை இன்னும் தாண்டவமாடிக் கொண்டு வருகிறது.

ஆங்காங்கு ஓடியும், தேங்கியும், சுரந்தும் காணப்படும் நீர்ப் பெருக்கத்தைக் கொண்டு, மண்ணைப் பண்படுத்தி, விளை நிலமாக்கி, விளைச்சலை உண்டாக்கிவரும் ஒரு விவசாய நாடாகவே திராவிடம் இருந்து வருகிறது. அதுவும் பண்டைக் காலத்தில் கண்டுபிடிக்கப் பட்ட முறைகளால்தான் நிறைவேற்றப்பட்டு வருகிறதேயல்லாமல், புதிய முறைகளைக் கையாண்டு நேரத்தைக் குறைப்பதும், உழைப்பைக் குறைப்பதும், பயனை மிகுவிப்பதும், விளைபொருள்களை ஒன்று, பத்து, நூறு மடங்காகப் பெருக்குவதுமான வழிகளில் இன்னும் முன்னேற்றம் அடையப் பெறவில்லை.

திராவிடம் ஒரு சாதாரண விவசாய நாடாக இருந்து வருகிறதேயல்லாமல், தொழிற்றுறையில் வளர்ந்து நிற்கும் தொழில் நாடாக வளரவில்லை. தொழிற்றுறையில் வளர்வதற்கான வசதிகள் இல்லை என்பது அல்ல அந்த நிலைக்குக் காரணம், மக்களினுடையவும், அரசாங்கத்தினுடையவும் முயற்சியின்மையே முக்கிய காரணமாகும்.

இந்த செய்பொருள்களை உண்டாக்குவதற்கான ஏராள மூலப்பொருள்கள் பூமிக்கடியில் முடங்கிக் கிடக்கின்றன. கோலார் தங்க வயலிலும், அதனைச் சுற்றி எண்பது மைல் சுற்றளவுக்குள்ளும் தங்கம் புதைபொருளாக இருந்துவருகிறது. சேலம் மாவட்டத்திலும், பல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தூர் என்றவிடத்திலும், வேறு பல இடங்களிலும் திட்டுத் திட்டாக இரும்புக் கனிகள் இருக்கின்றன. இன்னும் வெட்டியெடுத்த பாடில்லை. கடலூரிலிருந்து விருத்தாசலம் வரையிலுமுள்ள இடைவெளி நிலத்தினடியில் 50 கோடி டன் அளவுக்கு மேலாக நிலக்கரி குவிந்து கிடக்கிறது என்று அறிவிக்கப்படுகிறது. திருச்சியைச் சேர்ந்த வையம்பட்டிக் கிராமத்திலும், திருவாங்கூரை யொட்டி விளங்கும் தாடகை மலை யருகிலும், அணு ஆராய்ச்சிக்குப் பயன்பட்டு வரும் உலோகமான யுரேனியம் ஏராளமாகப் பதுங்கிக் கிடக்கிறது. எத்தனையோ லட்சக் கணக்கான டன்கள் அளவுக்குப் பாஸ்பேட் என்ற பாஸ்பரஸ் கலந்த பொருள் திருச்சி மாவட்டத்தில் வெட்டியெடுக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்செந்தூர், நாங்குனேரி தாலுகாக்களில் சுண்ணும்புக்கற்கள் 90,00,000 டன்களுக்குமேல் உறைந்து கிடப்பதாக 1946—47-ல் செய்த ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மைக்கா என்ற தாதுப் பொருள் உலகிலேயே இந்திய துணைக் கண்டத்தில்தான் மிகவாகக் கிடைக்கிறது; அதுவும் திராவிடத்தின் பகுதிகளில்தான் ஏராளமாகக் கிடைக்கின்றது. கந்தகப் பொருள்களும் மிகவாக ஆங்காங்கு புதைபட்டுக் கிடக்கின்றன. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வல்லம் என்ற பகுதியில் கண்ணாடிப் பாறைகள் நிலத்திற்கடியில் உறங்குகின்றன. மேட்டுப்பாளையத்தில் கிடைக்கும் மண், கண்ணாடி செய்வதற்குப் பயன்படுவதாகக் கண்டு அங்கு கண்ணாடித் தொழிற்சாலையொன்றும் அண்மையில் நிறுவியுள்ளார்கள். அம்மாதிரி கண்ணாடி செய்வதற்கான மண் நம் கண்ணில் அகப்படாமல் ஆங்காங்கு இருக்கத்தான் செய்கிறது. திருச்சியைச் சேர்ந்த டால்மியாபுரம், கோவையைச் சேர்ந்த மதுக்கரை, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதி ஆகிய விடங்களில் கிடைக்கும் மண் சிமெண்ட் செய்வதற்குப் பயன்படுவதாகக் கண்டறிந்து அங்கெல்லாம் சிறிய அளவில் ஆலைகள் தோற்றுவித்துள்ளார்கள். சேலம் மாவட்டத்தில் பீங்கான் போன்றவொருவித மண் பாறை பாறையாக பூமிக்குள் பதுங்கியும், வெளியே சிறிதளவு தோன்றி நின்றும் காட்சியளிக்கின்றன. நல்ல பருத்தியை விளைப்பதற்கான காடுகள் கோவை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இருக்கின்றன. அந்தப் பருத்தி முழுவதையும் பயன்படுத்துவதற்கான ஆலைகள் சரியானபடி இன்னும் உருவாகவில்லை. உலகம் முழுவதும் வாணிகம் நடத்துவதற்கேற்ற துறைமுகங்களையும், அந்தத் துறைமுகங்களிலே நிறுத்துவதற்கான மரக்கலங்களைக் கட்டுவதற்கு ஏற்ற மரங்கள் அடர்ந்த காடுகளையும் திராவிடம் கொண்டிருக்கிறது. கடல் நீரிலிருந்து பெட்ரோல் போன்றவொரு எண்ணெயைப் பிரித்தெடுக்கக் குறைந்த செலவில் இயலும் என்ற நிலை ஏற்பட்டால், அந்த 'வாட்ரோலியம்' என்ற எண்ணெயைப் பெறுவதற்கான முறையில் மூன்றுபுறம் பரந்து, விரிந்து செல்லும் கடல்களும் இங்கே இருக்கின்றன. தொழிற்சாலைகளை இயக்குவதற்கு இன்றியமையாததாகத் தேவைப்படும் மின்சாரத்தை அதிகமான அளவுக்குப் பெருக்கிக்கொள்வதற்குச் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியும், பைக்காராவும், மேட்டூர் அணையும், பாபநாசம் நீர்வீழ்ச்சியும் இருந்து வருகின்றன.

இவ்வளவு வளங்கள் கொழித்துக் கொண்டிருந்துங்கூட இங்கே,

தொழில்கள் வளர்ச்சியுறவில்லை. ஏன்?

இந்தக் கேள்விக்கு விடை, திராவிடம் வடநாட்டின் ஆதிக்கத்தின் கீழும், அதிகாரத்தின் கீழும் அகப்பட்டுக் கொண்டிருக்கிற வரையிலே எளிதிலே கிடைக்கப் பெறாது. வடநாட்டோடு திராவிடம் இணைந்திருக்கும் வரையில் திராவிட நாட்டின் இயற்கை வளங்கள் மூலப் பொருள்களாக முடங்கியே தாம் கிடக்கும். அந்த மூலப் பொருள்கள் செய் பொருள்களாக மாறி, நாட்டிலே நடமாடுவதை வடநாட்டு முதலாளித்துவம் என்றும் ஏற்றுக் கொள்வதில்லை; அந்த முதலாளித்துவத்திற்கு அணைப்பாக இருக்கும் இந்திய அரசாங்கமும் விரும்புவதில்லை.

எப்படியோ தொழில் வளத்தைப் பெருக்கிக் கொண்டுவிட்ட வடநாடு, இந்திய துணைக்கண்டம் முழுவதையும் தன்னுடைய ஒரே சந்தைக் கூடமாகவே கண்காணித்துவர எண்ணுகிறது. தனக்குப் போட்டியாகத் துணைக் கண்டத்தின் எந்தப் பகுதியிலும் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவிடாதபடி பாதுகாத்து, அப்படி ஏதாவது ஒன்றிரண்டு தனக்குப் போட்டியாகக் கிளம்புகின்றன என்று அறிந்துவிட்டால், அதற்கான தடைகளை விதித்துப் போட்டித் தொழிற்சாலைகள் ஏற்படாவண்ணம் தடுத்துவிட முனைகிறது. வடநாட்டுத் தொழிலரசர்களின் ஆலோசனையின் பேரில் நடந்துவரும் இந்திய அரசாங்கமும், அவர்களுக்குச் சாதகமாக நின்று என்றும் தொண்டாற்றி வரத் தயங்குவதில்லை. ஆகவேதான் தென்னாட்டில் — திராவிடத்தில் தொழில் வளர்ச்சியைக் காண இந்திய அரசாங்கம் அவ்வளவாக அக்கரை எடுத்துக்கொள்வதில்லை.

பெரும் தொழிற்சாலைகளைத் துவக்குவது என்றால் பெரும் பணக்காரர்களாலும், அரசாங்கத்தாலுந்தான் முடியுமே தவிர, பிறர் எவராலும் இயலாது. சிறிது சிறிதாக இந்திய அரசாங்கத்தின் காப்புப்பெற்று, ஓரளவுக்கு வளர்ந்து நிற்கின்றன வடநாட்டுத் தொழிற்சாலைகள். அதனால் பணம்படைத்த முதலாளிகள் அங்கே தோன்றிவிட்டனர். எவ்வளவு பெருந்தொகையையும் புரட்டவும், போடவும், எடுக்கவுமான அளவுக்கு வசதி பெற்று அவர்கள் உயர்தோங்கி நிற்கிறார்கள். இந்த நிலையில், தொழில் வளர்ச்சியில் பிந்திவிட்ட தென்னாடு—திராவிடம் தன்னுடைய இயற்கைச் செல்வங்களைக் கொண்டு தொழிற்கூடங்களை நிறுவ முயன்றால், அவற்றை முளையிலேயே கிள்ளிவிடத் தக்க அளவுக்குப் பண பலமும், செல்வாக்குப் பலமும், ஆதிக்கபலமும், தொழிற் பலமும் வடநாட்டு முதலாளிகள் கொண்டிருக்கின்றனர். போட்டி மனப்பான்மையால் அவர்கள் தங்கள் பலங்களைப் பிரயோகிக்கும் போது, அவற்றைத் தடுக்க எந்தச் சக்தியாலும் முடியாது. அவர்களைத் தென்னாட்டில் புகவிடாதபடி தடுக்க மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரமில்லை; அதே நிலையில அவர்கள் திராவிடம் உள்ளிட்ட இந்திய துணைக்கண்டம்முழுவதும் சுற்றிவர இந்திய அரசாங்கம் அனுமதிக்கிறது. இந்திய அரசாங்கமே தென்னாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க இயலாதா என்றால் இயலும். ஆனால் இந்திய அரசாங்கம் வடநாட்டுத் தொழில் முதலாளிகளின் ஆலோசனையின் பேரிலேயே எதையும் செய்யத் துணிவதால், அதன் கண்ணோட்டம் எப்பொழுதும் வடநாட்டின் மீது படிந்திருக்கிறதேயொழிய, தென்னாட்டின் மீது விழுவதில்லை.

இப்படியாகத், தென்னாட்டில் தொழில் வளர்ச்சி பெறாமல் தடுக்கவும், ஒரு சிறிது தலைதூக்கினால் அதோடு போட்டியிட்டு அழிக்கவும் வடநாட்டு முதலாளித்துவத்தால் முடிகிறது. எடுத்துக்காட்டாக 1938—39-ல் நாகையில, அப்பொழுது சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த தோழர் சி. இராசகோபாலாச்சாரியாரால் இரும்புத் தொழிற்சாலை ஒன்று சிறிய அளவில் திறந்துவைக்கப்பட்டது. அதுவேலை செய்யத்தொடங்கிய சில நாட்களுக்குள், வடநாட்டில் இரும்பு மன்னனாக விளங்கும் டாடா இந்தத் தொழிற்சாலையை நசுக்கிவிட எண்ணிப் போட்டியிட ஆரம்பித்தார். ஆண்டு ஒன்றுக்குக் கோடிக் கணக்கான ரூபாய்களை லாபமாகப் பெறும் டாடா கம்பெனி எங்கே! சில லட்ச ரூபாயில் துவக்கப்பட்ட நாகைத் தொழிற்சாலை எங்கே! யானைக்கும் எறும்புக்கும் போன்றதொரு போட்டி! டாடா தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்புச் சாமான்கள் நாகைத் தொழிற்சாலையில் செய்யப்பட்ட இரும்புச் சாமான்களின் விலைக்கு மிகவும் குறைவுபட விற்பனை செய்யப்பட்டன. இளம் பருவத்தில் இருக்கும் நாகைத் தொழிற்சாலையால் இதை எப்படிச் சமாளித்து நிற்க முடியும்! போட்டியினைச் சமாளிக்க முடியாத நாகைத் தொழிற்சாலையினர் சென்னை முதலமைச்சரிடம் சென்று முறையிட்டுப் பார்த்தனர். அதற்கு, சென்னை முதலமைச்சர் தோழர் சி, இராசகோபாலாச்சாரியார், டாடா கம்பெனியாரின் விற்பனையுரிமையை சென்னை மாகாணத்தில் தடுத்துவைக்க மாகாண அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், போட்டியினால் ஏற்படும் சங்கடமான நிலைமையைப் போக்கிக்கொள்ளத்,தான் வேண்டுமானால் ஒரு யோசனை கூறமுடியும் என்றும் கூறி, டாடா கம்பெனியார்க்கே நாகைத் தொழிற்சாலையை விற்றுவிடும்படியாக ஆலோசனை பகர்ந்தாராம். அவ்வளவுதான் மாகாண முதலமைச்சரால் கூற முடிந்தது. திராவிடத்தின் தொழில் வளர்ச்சியைக் காப்பற்றிக்கொடுக்க திராவிடத்தில் நிலவிவரும் அரசாங்கத்தால் இன்றுள்ள முறையில் முடியாது. திராவிடம் வடநாட்டின் வேட்டைக்காடாக இருந்துதான் வரும். அதற்குச் சாதகமாக இந்திய அரசாங்கம் இருந்துதான் தீரும் என்ற நிலை, திராவிடம் வடநாட்டோடு இணைந்திருக்கிற காரணத்தில் ஏற்படுகின்ற இன்றியமையாத விளைவாகும் என்பது நன்கு தெரியக்கிடக்கின்றது.

சென்னை மாகாணத்தில்சில இடங்களில் இரும்புத் தாதுப் பொருள்கள் கிடைத்தாலும், பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்த சாந்தூரில் கிடைக்கும் தாது தரம் உயர்ந்ததாகும் என்று அமெரிக்க நிபுணர்கள் அண்மையில் ஆராய்ந்து கூறியுள்ளார்கள். சென்னை மாகாணத்தில் இரும்பு — எஃகுத்தொழிற்சாலை யொன்று தோற்றுவித்தற்கு ஏற்றபடி, சாந்தூரிலும்சேலத்திலும் இரும்புத்தாதுகள் கிடைக்கின்றன என்ற உண்மை இன்று வெளியாகியுள்ளது. இரும்புத் தொழிற்சாலை யொன்று சென்னை மாநிலத்தில்

துவக்குவதுபற்றி சென்னை சட்டசபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு விடையிறுக்கும் முறையில், தொழில் வளர்ச்சி மந்திரி, "நிலத்தை அகழ்ந்துகாணும் நில அளவையாளர்கள் அரசாங்கத்திடம் கொடுத்துள்ள அறிக்கையின்படி, இந்த மாகாணத்தில் உயர்தரமான இரும்புத்தாதுகள் கிடைக்கப் பெறுவதாலும், தொழிற்சாலைக்குத் தேவையான அளவு சுண்ணாம்புக்கற்களும், தண்ணீரும் இரும்புக் கனிகளின் அருகே கிடைக்க வசதிகள் இருப்பதாலும், சென்னையில் ஒரு இரும்புத்தொழிற்சாலை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணத்தை அரசாங்கம் கொண்டிருந்தது" என்ற கருத்துப்படக்கூறியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல், சென்னையில் சிறந்த தொழில் நிபுணராகக் கருதிப் போற்றப்படுபவரும், மைசூர் திவானாக இருந்த காலத்தில் பத்ராவதி இரும்புத் தொழிற்சாலை உருவாவதற்குப் பெரிதும் துணையாக இருந்தவருமான சர். எம். விசுவேசுவரய்யா அவர்கள், பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்சாரத்தின் உதவிகொண்டு சென்னை மாகாணத்தில் சிறந்த ஒரு இரும்புத் —எஃகுத் தொழிற்சாலை நிறுவ முடியும் என்பதை விதந்தோதியுள்ளார். கடலூர்-விருத்தாசலம் இவற்றின் இடைவெளி நிலத்தில் வெட்டி எடுக்கப்படும் நிலக்கரி போதுமான அளவுக்குக்கிடைக்க ஆரம்பித்துவிட்டால், அதன் உதவி கொண்டும் தொழிற்சாலையை இயக்குவிக்கமுடியும். இவ்வளவு வசதிகள் இங்கு வாய்க்கப் பெற்றிருந்தும், இவ்வசதிகளைக்கொண்டு தொழிற்சாலையொன்று நிறுவமுடியும் என்று நிபுணர்கள் எடுத்துக் கூறியிருந்தும், இந்திய மத்திய அரசாங்கம் ஐக்கிய மாகாணத்திலும், ஒரிசாவிலும் இரண்டு இரும்புத் தொழிற்சாலைகளை நிறுவத் திட்டமிட்டிருக்கிறது. எவ்வளவு வசதிகளிருந்தபோதிலும் தென்னாட்டைப் புறக்கணிக்கவே மத்திய அரசாங்கம் விரும்புகிறது. அது வடநாட்டு முதலாளிகளின் தூண்டுதலின்பேரில் எழுந்த எண்ணமாக இருக்கக்கூடுமோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. தோழர் எம். ஏ. சலாம் அவர்கள் இதேஐயுறவை அடிப்படையாகக் கொண்டதால் தான்போலும், சென்னையைப் புறக்கணிப்பதற்கு முதலாளிகளுக்குள் சதி ஏதும் நடந்திருக்கக் கூடுமோ என்று சென்னை சட்டசபையில் கேள்வியொன்றும் கேட்டுள்ளார்.

திராவிடம், வரியாகப் பெரும் பொருளை மத்திய அரசாங்கத்திற்கு அளித்து வருகிறது, என்றாலும் அரசாங்கச் செலவில் ஏற்படுத்தப்படும் தொழிற்சாலைகள் வடநாட்டிலேயே நிறுவப்படுகின்றன. வளமிருந்தும்—வசதியிருந்தும் வகையில்லாத காரணத்தால — வகை புறக்கணிக்கப்படுகிற காரணத்தால் தொழில் வளர்ச்சியின்றித் திராவிடம் தாழ்ந்துபோகிறது என்பது தெற்றென விளங்குகிறது.

தொழில் வளர்ச்சியில் பிற்போக்கிலேயே நிற்கும் திராவிடம், வளர்ச்சி பெறவேண்டுமாயின் தொழிற்பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும். அதாவது வேறு நாட்டுச் செய்பொருள்கள், திராவிடத்தில் வளரும் தொழில்களைச் சிதைக்கும்படி இறக்குமதி செய்யப்படாமல் தடுக்கப்பட வேண்டும். அப்படித் தடுத்து உள்நாட்டுத் தொழில்களை வளர்க்கக்கூடிய முழு அதிகாரமும், திராவிடத்தின் கையிலிருந்தால்தான் அது முடியும். இன்றைய நிலையில் அந்த அதிகாரம் இந்திய அரசாங்கத்தின் கையிலிருப்பதால் திராவிடம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடிவதில்லை. திராவிடம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், வடநாட்டின் தொடர்பினின்றும் விடுபட்டுத் தனித்து நின்று ஆட்சி செய்ய முற்பட்டால்தான் முடியும்.

இங்கேயே உற்பத்தியாகக் கூடிய பொருள்களோடு, போட்டிபோடும் வெளிநாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்யாமல் தடுக்கவும், இங்கேயே உற்பத்தி செய்யப்படும் சாமான்களின் விலைக்கு எவ்விதத்திலும் குறைந்திருக்காதபடிக்கு வெளிநாட்டுச்சாமான்களுக்கு வரிவிதித்து உள்நாட்டுத் தொழிலைக் காப்பாற்றிக்கொடுக்கவும், உள்நாட்டில் உற்பத்தியாகும் அபரிமிதமான சாமான்களைத் தம் இச்சைப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கவும் ஆன காப்புபோர்டு திராவிடத்திற்கென அமைந்தால்தான், இவற்றையெல்லாம் சாதிக்கமுடியும். வளங்கொழிக்கும் திராவிடத்தைச் செல்வங்கொழிக்கும் திராவிடமாகச் செய்ய முடியும்.

சென்னை மாகாணத்தில் இரும்புத்தொழிற்சாலையை நிறுவவேண்டுமானால், கவனிக்கப்பட வேண்டியவைகளாகக் கூறும்போது, அடக்கவிலை, வெளியுலக ஆலை அரசர்களின் போட்டி, குறைந்த செலவில் கிடைக்கக்கூடிய மின்சாரம் இவைகளை ஆராய்ந்தறிய வேண்டியதவசியமாகிறது என்று கூறியுள்ளார் சென்னை மந்திரியார். வெளியுலக ஆலை அரசர்களின் போட்டியால் மாகாணத்தின் தொழில் வளர்ச்சி நசித்துவிடக் கூடும் என்ற பயம் மந்திரியாருக்கே ஏர்பட்டிருக்கிறது. அந்தப்பயம் மந்திரியார் உள்ளத்திலிருந்து மட்டுமல்லாமல், மற்றையோர் உள்ளத்தினின்றும் அகல வேண்டுமானால், அதற்குத் திராவிடம் தனியே பிரிவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்திய துணைக்கண்டத்தை ஒரே மார்க்கட்டாகக் கொண்டு, அதில் குறிப்பிட்ட ஒரு சாமானை உற்பத்தியாக்கவோ, விற்பனை செய்யவோ ஒரு தனிப்பட்ட முதலாளி உரிமை பெற்றுவிடுவதால் அந்த ஒருவனோடு போட்டிபோட எவராலும் முடியாத அளவுக்கு அந்த முதலாளி பெரும் முதலாளியாகிவிடுகிறான். வேறு நாடுகளிலிருந்து இந்தியத் துணைக்கண்டத்திற்குள் நுழையும் சரக்குகளுக்கும் அந்த ஒருவன் வைத்ததேதான் விலையாகவும் இருந்துவருகிறது. இந்த நிலை போகவேண்டுமானால் இந்திய அரசாங்கமே முழுப்பொறுப்பையும் எடுத்தாகவேண்டும். அது எடுத்துக் கொள்ளப்போவதாகத் தெரியவில்லை; எதிர்பார்ப்பதற்குமில்லை. பொருளாதார ரீதியில் இந்தியா பல் வேறு வர்க்கவட்டாரங்களாகப் பிரிந்து நின்றால், இந்த ஒரே முதலாளித்துவக் கொடுமை நிலவ வழியேற்படாது. திராவிடத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இருந்தக்கொடுமையைத் தொலைக்க வழியிருக்கிறது.

இங்கே வளம் இருக்கிறது—ஆனால் வகையில்லை! வகைபெறுவதற்கான ஒரே மருந்து 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்பதேயாகும்.

திராவிட நாடு

ஞாயிறு] 8—5—49 [காஞ்சி

# உருவான செயல்!

பதவியாசை, பட்டத்தாசை எதுவுமின்றி, காந்தீய நெறியில் நின்று, 'எம் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று பறைசாற்றி வரும் காங்கிரஸ் தலைவர்கள், பதவி பெறும் விளையாட்டிலீடுபட்டு, சென்னை மந்திரி சபையைச் சென்ற சில நாட்களாக வேட்டைக்காடாக்கி வருகின்றனர் என்பதை, அவர்களைச் சார்ந்த செய்தித்தாள்கள் கூறும்விபரத்தினின்றும் நன்கு அறிகிறோம்.

காந்தீய நெறியில் நிற்கும் 'கண்யவான்கள்', சென்னைச் சட்டசபைக் கட்சியில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றனர்! உட்பிரிவுகளின் தலைவர்களுக்குள்ளே, மந்திரிப் பதவிகளைப் பங்கிட்டுக் கொள்வதிலே, பேரம்! இந்தப்பேரத்தை நடத்திவைக்கத் தமிழ் நாட்டுக் காங்கிரசின் 'ஏகச் சக்ராதிபதி' தோழர் காமராஜ்! 'தூது நீ சொல்லிவாராயோ' என்று, கோஷ்டித் தலைவர்கள் தோழர் காமராஜரைத் தூதனுப்பி வருகிறார்கள். இந்த அரும்பணியை ஏற்று நடத்தியும் வருகிறார் தோழர் காமராஜர். இவர்களெல்லாம் தான் பதவியிலே ஆசை அற்றவர்களாம்! நாட்டு நலனுக்காகவேதான் பாடுபடுகிறார்களாம்!

மந்திரி பதவிகளைக்கோஷ்டிகளுக்கிடையே பங்கிட்டுக் கொடுக்கப் பேரம் செய்யும் பணியினை ஏற்றுக் கொண்டுள்ள 'காந்தீய பக்தர்' காமராஜர், தான், பதவியேதும் பெறாது—பெறவேண்டும் என்பதற்காகக் குறுக்குவழி எதையும் நாடாமல்—வெளியே யிருந்துகொண்டு, நேர்வழியில் சென்று கொண்டிருக்கும் திராவிடர் கழகத்தைப், பதவி பெறப் பாடுபடும் கட்சி என்னும் கருத்துப்பட, மட்டரகச் சொற்களால் திராவிடர் கழகத்தைத் தூற்றி வருகிறார். காங்கிரஸ் பதவி வேட்டை ஆடுகிறதா, திராவிடர் கழகம் பதவி வேட்டை ஆடுகிறதா என்பது பற்றி இப்போது மந்திரி சபையில் நடக்கும்நடவடிக்கைகளைக் கொண்டு நாடு தீர்ப்பளிக்கட்டும்!

பதவியைக் கைப்பற்றுவதற்காகவே திராவிடர் கழகம் காங்கிரஸ் மீது இல்லாததையும் பொல்லாததையும் கூறி, மக்களிடையே துவேஷ உணர்ச்சியை உண்டாக்கி வருகிறதென்று, மந்திரிகள் முதல் மந்திரிகளை உண்டாக்கி ஆட்டிப் படைக்கும் காமராஜர்கள் வரை எல்லோருமே கூறிவருகின்றனர். காங்கிரஸ்காரர்களிடமுள்ள பதவிகளைப் பறிக்க வேண்டுமென்ற பகைமை உள்ளமோ, அல்லது பதவியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்ற பரபரப்போ திராவிடர் கழகத்தாருக்குக்கிடையாது. ஆனால், பதவி, தன்னைக் கைப்பற்றியவர்களால் பாதுகாத்துப் பயன்படுத்தப் படவில்லை என்ற நிலை பிறக்கும் போது, அதனைத் திராவிடர் கழகம் ஏற்க ஒருபோதும் தயங்காது. மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ள எந்தக் கட்சியும், பதவி வகிப்பதன் மூலம் மக்களுக்குச் செய்யக்கூடிய நல்ல காரியங்களைச் செய்யாமல், பதவியைப் பவனிக்கும் படாடோபத்திற்கும் பயன்படுத்தாது. இன்று காங்கிரசுக்குக் கிடைத்துள்ள பதவி, நாம் மேலே எடுத்துக் காட்டிய இரண்டு வழிகளுக்குமே பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதைப் பொதுமக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். இந்த உணர்ச்சி, திராவிடர் கழகக் கூட்டங்களின் மூலம் பிரதிபலிக்கின்றது. பதவியிலுள்ள காங்கிரஸ், பொதுமக்களின் நலன்களைப் புறக்கணித்து விட்டது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுப் போன்றதே திராவிடர் கழகக் கூட்டங்களில் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடித் தங்களின் ஆதரவைக் காட்டுவது.

இது பதவியிலிருக்கும் காங்கிரஸ் தோழர்களுக்குப் பீதியை உண்டாக்கிவிடுகிறது. சாதாரணபொதுக் கூட்டம் கூட ஒரு மாநாடு போல் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொண்டதாக இருக்கிறதே! ஆளும் வாய்ப்பைப் பெறாத ஒரு கட்சிக்கு, இவ்வளவு ஆதரவு நாட்டில் இருக்குமானால், ஆளும் உரிமை ஒருவேளை எங்கே பறிபோய் விடுமோ என்ற பயம், காங்கிரஸ் தோழர்களுக்கு ஏற்பட்டு விட்டது. எனவேதான், செல்லும் திசையெல்லாம் திராவிடர் கழகத்தை ஒரு மூச்சுத் திட்டித் தீர்வது என்ற முடிவைக் காங்கிரஸ் தலைவர்கள் கொண்டுள்ளனர்.

ஆளும் உரிமையோடு அதிகாரத்தில் இருக்கும் ஒரு கட்சி, இன்னொரு கட்சியைப் பற்றிக் குறை கூறினால், அதனைப் பொதுமக்கள் நம்பித் தம் வழி நிற்பர் என்ற நம்பிக்கை, ஜனநாயக முறைக்கே நேர்மாறானதென்பதை; உணரும் அரசியலறிவு இல்லாத காரணத்தால், எதிர்க் கட்சிகளை ஏளனமாகப் பேசுகிறார்கள்.

மக்களின் ஆதரவைப் பெற்று, மன்பதையை ஆளும் இவர்கள், மக்களின் ஆதரவைப் பெறாத கட்சியென்றும், சிறுபான்மைக் கட்சியென்றும் கருதும் ஒரு கட்சியைப் பற்றி ஏன் பயப்பட வேண்டும் என்று பொது மக்கள் நினைக்க மாட்டார்களா என்ற நினைப்புக்கூட இவர்களுக்கு ஏற்படுவதில்லை. பூனையைக் கண்டு புலி பயப்பட்டால், புலியால் பூனையை வெல்லமுடியாத நிலை ஏற்பட்டு விட்டதென்றுதானே பொருள் கொள்ள வேண்டும். புலிக்கு உண்மையிலேயே பலம் குன்றி விட்டதென்று வைத்துக் கொண்டாலும், அதன் தோற்றம் ஒன்றே பூனைக்குத் திகிலைக் கொடுத்துவிடுமே! ஆனால், இங்கு பூனை, புலியின் வடிவத்தைக் கண்டும் கூட பயப்படவில்லை. ஆனால் புலி ப்ப்படுகிறது பூனையைக் கண்டு! காரணம்; தன்னுடைய பலம் குன்றிவிட்டதென்பதைப் புலி உணர்ந்துவிட்டது.

இந்த நிலை இன்று பதவியிலிருக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. தங்களுடைய பலம் அதாவது செல்வாக்குக் குறைந்துவிட்டதென்பதையும், பொதுமக்கள் தங்கள் மீது வெறுப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், தங்களுடைய பலவீனத்தை மறைக்க, மாற்று மருந்தாகத், திராவிடர் கழகத்தைத் திட்டும் முறையைக் கையாளுகிறார்கள். இந்த மாற்று மருந்து, காங்கிரசுக்கு இன்னும் இருந்துவரும் சிறிதளவு செல்

வாக்கையும் இழந்துவிடச் செய்யுமேயன்றி, அவர்களுடைய நினைப்பின்படி செல்வாக்கு வளர்ந்துவிடாதென்பதை அவர்கள் உணரும்நாள் வெகு தொலைவில் இல்லை. அந்த அளவுக்கு அவர்களைப் பதவிமோகம் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. பதவி வேட்டை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சி, பாமர மக்களின் குறைகளை உணர்ந்து பணியாற்றும் பண்பைப் பெறும் என்று யார்தான் எதிர்பார்க்க முடியும்?

ஒரே கட்சியென்றும், ஒரே கொள்கையென்றும் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் கட்சிக்குள் பல பிரிவுகள் (கோஷ்டிகள்) ஒன்றையொன்று மோதிக்கொள்ளும் அளவுக்குத் தோன்றி வளர்ந்துவிட்டன. இந்தப் பிரிவுகள் எதனால் உண்டாயின? கட்சிக் கட்டுப்பாட்டில், ஏற்பட்ட கோளாறினாலா? இல்லை. கொள்கை மாறுபாட்டாலா? அதுவும் இல்லை. பதவி! பதவி!! பதவி!!! இது ஒன்றேதான் இதற்குக் காரணம். பிரகாசத்தைச் சேர்த்துக்கொண்டால் மந்திரிசபை நிலைக்குமா? சுப்பராயனைச் சேர்த்துச் கொண்டால் நிலைக்குமா? என்ற பெரும் பீதி இன்றைய மந்திரிசபையைப் பிடித்தாட்டியபடி இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ள யார் யாரை மந்திரிகளாக்குவது? எந்தக் கோஷ்டியில் சேர்வது? என்ற கவலையில் ஆழ்ந்துக் கிடக்கின்றனரே யன்றி, நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய உருவான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற கவலையைக் கொள்ளக் காணோம். மனைவியிடம் கோபம் கொண்ட கணவன், வீட்டிலுள்ள சட்டிகளை உடைத்துத் தன் கோபத்தைத் தீர்த்துக்கொள்வது போல், காங்கிரஸ் தோழர்கள் பதவி மோகத்தால் ஏற்படுத்திக்கொண்ட கோஷ்டிளோடு காட்டவேண்டிய கோபத்தைத், திராவிடர் கழகத்தார் மீது காட்டித் தணித்துக்கொள்ளப் பார்க்கின்றனர். ஓமந்தூரார் மந்திரி சபை விலகி, இராசபாளையத்தார் மந்திரி சபை வந்ததும், அதனை உருவாக்குவதில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையின் எதிரொலியே, இப்போது சில நாட்களாகத் திராவிடர் கழகத்தைத் திட்டுவதாக அமைந்திருக்கிறது. மந்திரிகளும்; மந்திரிகளை ஆக்குவோரும் இப்பொழுது எங்கு சென்றாலும், எதைப்பற்றிப் பேசினாலும் திராவிடர் கழகத்தார் மீது ஒரு பாய்ச்சல் பாய்ந்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கிறார்கள். இந்தப் போக்கு, அவர்களுக்கு அழிவைத் தருமா? அல்லது ஆக்கத்தைத் தருமா? என்பதை அவர்கள் இப்போதுள்ள பதவி மோகத்தில் உணர முடியாவிட்டாலும், உலகியல் நடவடிக்கைகள் நாளாவட்டத்தில் அவர்களுக்கு உணர்த்தியே தீரும். அப்போது அவர்கள் தங்கள் தவறை உணர்ந்து வருந்துவதோடு, திராவிடர் கழகத்தார்மீது சாட்டிய குற்றச் சாட்டுகள் எல்லாம் அவசர புத்தியால் அறியாது அள்ளித் தெளிக்கப்பட்ட அவதூறுகள் என்பதையும் உணர்வர்.

காக்கிரஸ் மந்திரிசபையின் போக்குக்கண்டு, காங்கிரஸ் ஏடுகளும், காங்கிரஸ் தலைவர்களுமே எள்ளி நகையாடுகின்றனர்—சிரிக்கின்றனர்—கண்டித்துச் சினங்கொள்கின்றனர் — வழி கற்பித்துச் சீறுகின்றனர். இவற்றையெல்லாம் மக்கள் அறியாமலில்லை. ஆனால் இவற்றையெல்லாம் மக்கள் மறக்கும்படி செய்யவேண்டித், திராவிடர் கழகத்தின் மேல் பொய்க்கூற்றுக்களைப் புனைந்துகூறி, மக்களிடம் தூற்றுதல் பிரசாரத்தைத் துவக்கியுள்ளார்கள் இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் எனப்படுவோர். இத்தகைய முறையில் நாட்டிற்கு 'நற்பணி' யாற்றிடுவோர் தாம் பதவிகளைப் பங்கு போடுவதிலே இன்று முனைந்துள்ளார்கள்!!

மந்திரிப்பதவிகளை வகிப்பதற்குப் போதுமான திறமையும், அறிவும், ஆற்றலும் படைத்தவரையே பொறுக்கி எடுக்கும் பண்பை நாகரிகமுடைய நாடுகள் பலவும் கொண்டிருக்கக் காணகிறோம். ஆனால் இங்கு, ஆளவந்தார்கள், நாட்டை மறந்து, மக்களை மறந்து, நாட்டிலுள்ள நிலைமையை மறந்து, ஆட்களைப்பொறுக்கிக் கொண்டு, அவர்களின் எண்ணிக்கைக் கேற்றபடி பதவிகளைப் பொறுக்கிக் கொள்ளும் விசித்திரப் போக்கு நிலவி வருகிறது. இது ஒருவெட்ககரமான செயலாகப், பிறரைப் பழி தூற்றும் அவர்களுக்குப் புலப்படவில்லை போலும்!

தோழர் டி. பிரகாசம் சட்டசபையிலுள்ள பிரிவுகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்றபடி, விகிதாசாரமுறைப்படி, பதவிகள் பங்கிட்டுக்கொடுக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், அதற்குப்பிரதமர் தோழர் குமாரசாமி ராஜா இணங்கிவரவில்லை என்றும், ஆகவே சமரசம் ஏதும் ஏற்படாத காரணத்தால், மந்திரிசபையின் எண்ணிக்கையை விரிவடையச் செய்யும் முயற்சி, தற்காலிகமாகநிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கூத்து நடந்துமுடிந்தபிறகு, முதலமைச்சர் தோழர் குமாரசாமிராஜா உண்மைக் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

> "கிராமங்களில் இருக்கும் மக்கள் எத்தனை மந்திரிகள் இருக்கின்றனர் என்று கவலைப்படுவதில்லை. அரசியல் வாதிகள் தான் கவலைப்படுகின்றனர். மக்கள், சர்க்கார் நிர்வாகம் சரியாக நடைபெற வேண்டும் என்றும், நல்லமந்திரிகள் வேண்டும் என்றும், உணவுப் பொருள்கள் முதலியவைகள் ஏராளமாகக் கிடைக்கவேண்டும் என்றும்தான் கவலைப்படுகின்றனர்"

என்று கூறியுள்ளார்.

இந்த உண்மைக்கருத்து, ஆரம்பத்திலேயே பிரதமர் உள்ளத்தில் ஏற்பட்டிருக்குமேயானால், இவ்வளவு சங்கடம் நிறைந்த, பரிகசிக்கத்தக்க நிலைமைகள் உண்டாகியிருக்கா.

"மந்திரிசபையை விரிவாக்கப்போகிறீர்களா?" என்று நிருபாகள் கேட்டகேள்விக்கு விடையிறுத்தப் பிரதமர் தோழர் ராஜா,

> "நான் இப்பொழுது மந்திரி சபையை விரிவாக்கப்போவதில்லை. அவசரப்பட்டு ஏதாவது செய்வதாக எண்ணம் இல்லை. நிர்வாக வேலை நடந்துவருகிறது. இந்த விஷயங்களையெல்லாம் கொஞ்சக் காலத்திற்கு மறந்து, உருப்படியான வேலையைப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன்"

என்று குறிப்பிட்டுள்ளார். "உருப்படியான வேலையைப் பார்க்கவேண்டும் என்று நினைக்கிறேன்" என்று கூறும் பிரதமர், இதுவரையில் பதவிப் பங்கீடுபற்றி நடந்துவந்த சர்ச்சைகளையெல்லாம் உருப்படியற்

## விஞ்ஞானக் குறிப்புகள்

### மனித ஊழி

உலகில் மனிதன் தோன்றி சுமார் மூன்றுகோடி ஆண்டுகள்தாம் இருக்கலாம். ஆனால் உலகம் தோன்றி, சற்றேறக்குறைய மூந்நூறு கோடி ஆண்டுகள் ஆவதாக நிலநூலறிஞர்கள் கூறுகின்றனர். ஆகையால் மனிதன் தோன்றுவதற்கு முன் உள்ள 297-கோடி ஆண்டுகளில், அனேக கோடி ஆண்டுகள் உலகில் உயிரினமாவது, செடி, கொடி, மர இனமாவது, இல்லாமல் இருந்திருக்கவேண்டும். அப்படிச்செடியினந்தோன்றிப் பல கோடி ஆண்டுகள் கழித்தே உயிரினம் தோன்றியிருக்கவேண்டும். உயிரினந்தோன்றியபின் உள்ள காலத்தை முதுகெலும்பில்லா உயிர்களின் ஊழி, ஊரும் உயிர்களின் ஊழி, பறவையினத்தின் ஊழி, முலைப்பால் ஊட்டும் உயிர்களின் ஊழி, என்று அவ்வவ் காலங்களில் சிறப்பாய் உள்ளதுசிறந்து (பரிணமித்து)நின்ற உயிர்களைக் கொண்டு பிரித்தனர். உள்ளது சிறத்தல் என்னும் கொள்கையின்படி ஒரு வகை உயிர் வேறு உயிராக மாறுவதற்குப் பலகோடி ஆண்டுகள் செல்ல வேண்டும். மற்றெல்லா உயிரினங்களையும் விடச் சிறப்புள்ளவன் மனிதன் ஆகையால், இக்காலததை 'மனித ஊழி' என்று அழைக்கிறார்கள்.

* * *

றவை என்றுகருதுகிறார்எனஎண்ண இடமிருக்கிறது. அது சரியானல், அதே எண்ணத்தில்தான், நாமும் கூறினேம், உருப்படியற்ற செயலில் காங்கிரஸ் இறங்கிவருகிறது, உருப்படியான காரியங்களைச் செய்ய, அது தன்கையில் கிடைத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று.

பதவிப்பங்கீடு பெறுவதுபோன்ற உருப்படியற்ற செயல் பலவற்றிலே ஈடுபட்டுவரும் காங்கிரஸ்காரர்கள், பிரதமர் தோழர் குமாரசாமிராஜா எண்ணுவதுபோல், இனியாயினும் உருப்படியான செயல்கள் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம். கருத்து வேறுபாடுடையவர்களைத் தூற்றித்துவேஷிப்பதுதான் உருப்படியான செயலாகும் என்று கருதினாலும் தாராளமாகச் செய்யட்டும்!

பதவிப் பங்கீட்டிலே அக்கரை செலுத்திவரும் காங்கிரஸ் தோழர்கள், நாட்டுமக்களுக்கு நலத்தைப் பங்கிட்டுக்கொடுப்பதிலே அக்கரை காட்ட முயலுவார்களேயானல், அது நாட்டுக்கும் நல்லது; அவர்களுக்கும் நல்லது; உருப்படியான செயலென்றும் போற்றப்படும்!

—*—

### பழங்காலத்து மனிதன்

ஆதிகாலத்தில், மனிதன், இப்போதுள்ள அவன் பரம்பரையினரைப் போல, அவ்வளவு நாகரிகமுள்ள உயிரினத்தைச் சேர்ந்தவனல்ல. அவன் விலங்கினின்றும் அதிக வேறுபாடு காணமுடியாத காட்டுமிராண்டியாகத்தான் இருந்தான். புல்லாய்ப், புழுவாய், ஊர்வனவாய்ப், பறப்பனவாய், விலங்காய், விலங்குகளில் குரங்காய், பின் குரங்கிலிருந்து ஆதி மனிதன் தோன்றினன் என்பது டார்வின் என்ற அறிவியலறிஞனின் ஆராய்ச்சி. இந்த முடிவை மற்ற அறிவியலறிஞர்களும் ஒப்புக்கொண்டனர். ஆகவே வால் குரங்கிலிருந்து வாலில்லாக் குரங்காகிப் பின் மனிதனுகிய நமது முன்னோர்கள், முதலில் மனிதத் தோற்றம் பெற்று உலகில் காட்சியளித்தது மூன்றுகோடி ஆண்டுகளுக்கு முன்னால். அதிலிருந்து மாறி மாறி தற்போதுள்ள நாகரிக நிலைக்கு வந்திருக்கும் மனிதன், இன்னும் மூன்றுகோடி ஆண்டுகளுக்குப் பின்னல், இப்போதிருப்பதைவிட, மிக மேன்மை பொருந்தியவனுகவும், அளவிறந்த மூளைத்திறமையுடையவனுகவும் இருப்பானென்று ஊகிக்கப்படுகிறது. நாளுக்கு நாள் மனிதன் தன்னுடைய அறிவிலும், ஆற்றலிலும், தோற்றத்திலுங்கூட வளர்ச்சியடைந்து மேன்மைக்கு வருகிறான் என்பதே உயிரினநூலும் (Biology) மனிதஇனநூலும் (Anthropology) தெரிவிக்கும் உண்மையாகும்.

*

### உலகின் வயது

வெப்பக் காற்றுயிருந்து, உருகிய பிழம்பாகியபின் குளிர்ந்து இறுகிக் கெட்டியான, ஆதிகாலத்தில் ஏற்பட்ட உருக்குப் பாறைகளின் வயதை அளந்தறிந்து, அதன்மூலம் உலகவயது சொல்லப்படுகிறது. இதுவரை நிலநூலறிஞர்களால் ஆராய்ந்தறியப்பட்ட பாறைகளில் மிகவும் பழமையான பாறைகளின் வயது சற்றேறக்குறைய 150 கோடி ஆண்டுகள் என்று தெரிகிறது. ஆனல் உலகம் தோன்றிய காலம் 300-கோடி ஆண்டுகள் இருக்கலாம் என்று ஊகிக்கப்பட்டு வந்தது. ஆதிகாலத்திய உருக்குப் பாறைகள் எல்லாம் பூமியின் அடியில் ஆழ்த்தப்பட்டுப் புதைந்து கிடப்பதால், மிகவும் பழைமையைத் தெரிவிக்கும் அப்பாறைகள், நிலநூல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக்குக் கிடைக்காமலிருப்பதே, உலகின் வயதைத் திட்டப்படுத்துவதற்குத் தடையாக இருந்தது.

உலகின் பல பாகங்களிலிருந்து தேடிக் கொண்டுவரப்பட்ட சுமார் 30 வானக்கற்களை ஆராய்ச்சி செய்து, அவைகளின் வயது சுமார் 300 கோடி ஆண்டுகள் இருக்கலாம் என்று கண்டறிந்ததாகவும், இந்த வானக்கற்கள் எல்லாம் உடைந்து போன ஒரு கோளின் (கிரகம்) சிதைவுகள் என்பதனல், அந்தக் கோளின் வயது மேற்படி வானக் கற்களின் வயதேயாகும் என்பதாகவும், உலகமும் மற்றக்கோள்களும் ஒரே காலத்தில் ஏற்பட்டதாக அனுமானிக்கப்படுவதால், நமது உலகின் வயதும் மேற்படி வானக்கற்களின் வயதுக்குச் சற்றேறக்குறையச் சரியாய் இருக்க வேண்டுமென்றும் விஞ்ஞானப்பேராசிரியர் எவ். ஏ. பன்னத் போன்றவர்கள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள். இவைகளிலிருந்து உலகின் வயது சற்றேறக்குறைய 300 கோடி ஆண்டுகள் என்று ஒருவாறு ஒப்புக் கொள்ளலாம்.

*

> சமுதாயம் என்ற சங்கிலித் தொடரில், ஒரு மணியாக நீ சேர், அல்லது இலட்சியமற்ற புழுதியாகச் சுழல்.
>
> — கவி. இக்பால்.

# சொந்தநாட்டில் :: :: அகதிகள்

—✲—

தம் சொந்த நாட்டில் வாழ வழி கிடைக்காததால், வேறு நாடு சென்று கூலி வேலை செய்தாலாவது வாழ்க்கைக்கேற்ற அளவுக்கு ஊதியம் பெறலாம் என்று நம்பி, பர்மாவில் குடியேறிய (பெரும்பாலும் திராவிடத்தைச் சேர்ந்த) பாட்டாளிகள், இன்று அலறிக்கொண்டு அகதிகளாக ஓடிவருகின்றனர். தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளத் தாய்நாடு நோக்கி ஓடிவருகின்றனர். ஆயிரக் கணக்கில் ஓடிவருகின்றனர்!

அரும்பாடுபட்டு உழைத்தால், கட்டிப் பொன்னைக் கையிலேந்தித் தாயகம் திரும்பலாம் என்று கருதிச் சென்றவர்கள, அழுத கண்ணீர்—அலங்கோலமான கந்தலுடை—கவலை தோய்ந்த முகம் —வற்றிய வயிறு – வாடிய தோற்றம் ஆகிய இவைகளைச் சொத்தாகக் கொண்டு, தமிழகத்தின் கரை சேர்ந்துள்ளனர். ஏதும் அற்ற அகதிகளாகச் சென்னை துறைமுகத்தில் வந்து சேர்ந்துள்ளார்கள்!

மே முதல்நாளன்று, 1240 பேர்கள் அகதிகளாய்ச் சென்னைத் துறைமுகத்தில் வந்திறங்கியுள்ளார்கள். அவர்களில் ஆடவர் 620 பேர், பெண்கள் 380, குழந்தைகள் 240. இவர்களையன்றித் தெலுங்குப் பகுதியைச் சென்றடைய, விசாகைத் துறைமுகத்தில் இறங்கச் சென்றோர் நூற்றுக் கணக்கினர். இதற்கு முன்பு, ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்பட்டவர்கள், இதே நிலையில் வந்திறங்கியுள்ளனர். அகதிகளாக ஓடிவருவோரின் எண்ணிக்கை, மேலும் மேலும் வளரக்கூடும் என்ற மாதிரியில், நிலைமையும் வளர்ந்துகொண்டு வருகிறது.

இவர்களெல்லோரும் அடித்துத் துரத்தப்படுகிறார்களா என்றால், இல்லை. அப்படி நடந்திருந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை, சொந்த நாட்டையும், சொந்த நாட்டு மக்களையும், உடைமையையும் காப்பாற்ற எண்ணும் தாய் நாட்டுப் பற்றுடையோரின் செயல் அது என்று இருந்துவிடலாம், கலங்கி நிற்கும் அவர்களைப் பார்த்து, ஓடிவந்ததற்குக் காரணம் என்ன என்று வினவியபோது, அங்குள்ள நெருக்கடியான சண்டை சச்சரவு நிலைமையின் காரணமாக, வேலையேதும் கிடைக்காமல் வாளா கிடக்கவேண்டியிருப்பதாலேயே, யாவரும் தாயகம் திரும்பிவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டதாகப் பதிலிறுத்தார்களாம். வேலையற்றோரின் பட்டாளம் மீண்டும் தாயகம் சேர்ந்துள்ளது!

இவர்களில் பெரும்பாலோர் தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். வேலையும், உண்ண உணவும் அற்ற நிலையில, இராமநாதபுரத்தைச் சேர்ந்த பட்டினிப் பட்டாளங்கள் மாகாணத்தின் பல்வேறு பாகங்களில் குடியேறி வரும் காட்சியைக் காண்கிறோம். இந்த நிலையில், புதிய பட்டினிப்பட்டாளங்களையும் இறக்குமதி செய்து கொண்டிருக்கும் திராவிடத்தின் வருங்கால நிலை என்னவாகும் என்பதை உணரவேண்டும்.

அவர்களெல்லோரும் இங்கு வரக்கூடாதவர்களா என்றால், இல்லை, வரக்கூடியவர்கள்—வரவேண்டியவர்கள்—வர உரிமை படைத்தவர்கள். எனவே தான் வந்துவிட்டார்கள். அவர்கள் வருகை, இங்கு நிலவும் நிலைமையைப் பொறுத்து ஏக்கந் தருவதொன்றாக விளங்கிய போதிலும், அவ்வேக்கத்தின் காரணமாக நம் விழிகளிலே வழியும் கண்ணீரைச் சற்றுத் துடைத்துவிட்டுப் பார்த்தால, வடநாட்டு அகதிகள் ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் இங்கு அண்டி வாழும் நிலை தெரியும். வடநாட்டில் அகதிகள் அலறித் துடித்து இடம் பெயர்ந்து திண்டாடி நின்ற காலையில், சென்னை மாகாணம், பதினாயிரவரை ஏற்றுக்கொள்ள சம்மதமொழி கொடுத்தது. அதன்படி ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வடநாட்டு அகதிகள் அரசாங்கப் பாதுகாப்பில் இருந்து வருகின்றனர். இப்பொழுது இங்கே நம் நாட்டு அகதிகள் குவிகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினரை ஏற்றுக் காப்பாற்ற வடநாட்டினர் ஒப்புவாரா? அல்லது வடநாட்டு அகதிகளை அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்பிவிட்டு, நம் நாடு வந்து சேர்ந்திருக்கும் சொந்த அகதிகளை ஆதரிக்க சென்னை அரசாங்கந்தான் முற்படுமா? அல்லது அவர்களுக்குக் கொடுத்துவரும் அதே சலுகையை இவர்களுக்கும் கொடுக்க ஒப்புமா? கேட்டால், வடநாட்டுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் தென்னாட்டு அரசாங்கம், கையைத்தான் விரிக்கும்; வாய் ஊமையாகத்தானிருக்கும்!

இந்திய நிலபாகத்தினின்றும் வெளி நாடுகளுக்குக் கூலிகளாகச் செல்லும் மக்கள், எந்தப் பகுதியிலிருந்து மிகவாகச் செல்லுகின்றனர் என்று பார்த்தால், திராவிடப் பகுதியிலிருந்துதான் செல்லுகிறார்கள் என்பது விளங்கும். அப்படிப்பட்ட திராவிடப் பாட்டாளி மக்கள், கூலி வேலை செய்துகூடப் பிழைக்க முடியாதபடி, சில இடங்களில் அரசாங்கத்தாலும், சில இடங்களில நிலைமையாலும் துரத்தியடிக்கப்படுகிறார்கள். ஆனால் இங்கு—வளம பொங்கும் திராவிடத்தில், வடநாட்டு மார்வாடி, குஜராத்தி, மூல்தானி, பனியா, பட்டாணி ஆகியோர் அண்டிப் பிழைத்தும், சுரண்டியும் முதலாளிகளாய்வாழ்ந்து வருகிறார்கள். சொந்தநாட்டவர்கள்வெளிநாடுகளில் துரத்தியடிக்கப் படுகிறார்கள்; அதே வேளையில் வெளிநாட்டவர் இங்கு சுரண்டி உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள். இந்த உல்லாச வாழ்வுச் சீமான்களை, அவர்கள் சொந்த நாட்டிற்குப் போகும்படி துரத்தியடிக்கும் திருப்பணியினைத், திராவிடம் மேற்கொள்ள முயலுமேயானால், நம் நாட்டவர் இங்கு அகதிகளாக மீண்டும் வருகிறார்களே என்று கவலை கொள்ளத் தேவையிருக்காது; ஏங்க வேண்டிய அவசியமில்லை; பிறகு கண்களில் வழியும் நீர் அழுகை நீராக இராது, களிப்பால் துள்ளி விழும் மகிழ்ச்சிக் கண்ணீராகத் தான் இருக்கும்!

பர்மாவிலிருந்து அகதிகள் வருகின்றனர்; ஏக்கம் ஏற்படுகிறது! ஏக்கம் அவர்களை வாழவைக்கும் வழியாகாது. இங்குள்ள வடநாட்டினரை அவர் நாட்டுக்கு அனுப்பிவைக்கும் முயற்சியை மேற்கொண்டால், நம்மவரில் அகதிகளாக வருவோர் வாழ வழி கிடைத்துவிடும். ✲

# சோதனையில் வெற்றி

அண்ணாமலைநகர் வழக்கில்பிணைப்புண்டு, சென்ற ஓராண்டு காலத்திற்கு மேலாக, அல்லல் பல ஏற்று, நீதிக்காக வாதாடி நின்ற திராவிட கழகமாணவர்களும், தில்லைதிராவிடக் கழகத் தலைவரும் குற்றமற்றவர்கள் எனத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளார்கள். வழக்கில் விடுதலைபெற்று, வாகைசூடி வெளியேறிய தோழர்களை, நாம் வெற்றி வாழ்த்துக்கள் கூறி வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம்.

அண்ணாமலை நகரில், காங்கிரஸ்—திராவிடர்கழக மாணவர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு, நாளடைவில் பூசலாகமாறி, பூசல் போராடும் கட்டத்திற்கு வந்தது. திராவிட மாணவர்கழ்க வளர்ச்சியைக்கண்டு பொறாமை கொண்ட காங்கிரஸ் மாணவர்கழகம், வலிய வம்புக்கு வரவே, பூசலும், போராட்டமும் ஏற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. திராவிட மாணவர் கழகத்தார், வலிய வம்புக்குச் செல்லவேண்டிய அவசிய மில்லாதவர்கள்; காரணம், அவர்கள் கண்டு பொறாமைப் படத்தக்க எதுவும் காங்கிரஸ் மாணவர்களிடத்தில் இருப்பதாகக்கருதுவதில்லை. ஆனால் வலிய வந்த சண்டையைச் சமாளித்து நிற்கவேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆனார்கள். அதன் விளைவாக, இருதரப்பாரிடையேயும் ஏற்பட்ட அடிதடியால், குருதி கசியும் காயங்கள், இருசாராரிடையேயும் ஏற்பட்டன.

இந்தக் கலகத்தைக் குற்றமுடைய தொன்றாகும் என்று எடுத்துக்கொண்டால், அப்படிச் சாட்டப்படும் குற்றம் இருசாராரையுந்தான் சாரும். அதன்படிதான் இரு தரப்பு மாணவர்களும் வழக்கில் ஈடுபடுத்தப்பட்டு, கீழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். ஒரே சட்டப்பிரிவின் கீழ்தான் காங்கிரஸ் மாணவர்களும், திராவிடர்கழக மாணவர்களும் வழக்குத் தொடுக்கப்பட்டார்கள். ஆனால் நீதியின் கோல் ஒருபக்கம் சாய்ந்தது! காங்கிரஸ் மாணவர்கள் வழக்கினின்றும் விடுதலை செய்யப்பட்டார்கள்! ஆட்சிப் பீடத்திலுள்ளோர் அவர்களைச் சேர்ந்தோர்கள் என்ற காரணத்தால்! நீதி ஒரு 'கண்ணை' மூடிக்கொள்வானேன் என்று நாம்கேட்டோம், பதிலில்லை!

அந்நகர் திராவிடக்கழக மாணவர்களான தோழர்கள் மதியழகன், கோவிந்தன், கண்ணையன், திருநாவுக்கரசு, திருஞானம் ஆகியோரும், தில்லை திராவிடர்கழகத் தலைவரான தோழர் கிருட்டிணசாமி அவர்களும் வழக்கின் காரணமாகப் பலநாட்கள் அலக்கழிக்கப்பட்டார்கள், நீதிமன்றத்திற்கு வரும்படி. படிப்பு ஓர் பக்கம், பணக்கடினம் மற்றோர் பக்கம், இவற்றினிடையே மாணவர்கள் அல்லலுற்றார்கள். அரசாங்கம் இரக்கங்காட்ட மறுத்தது. கீழ்நீதி மன்றம் குற்றமுடையவர்களெனத் தீர்ப்பளித்து, மாணவர்களுக்கு அபராதமும், தில்லை திராவிடர்கழகத் தலைவருக்கு ஆறுமாத கடுங்காவல் தண்டனையும் விதித்தது. நீதிக்காக இறுதிவரையில் வழக்காடித்தீருவது என்று, அவர்கள் உறுதி பூண்டு மேல் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அங்கே அவர்களுக்கு நல்ல தீர்ப்புக் கிடைத்துவிட்டது! அவர்கள் குற்றமற்றவர்களே என்று மாஜிஸ்ட்ரேட் கூறிவிட்டார்! தங்கள் மேல் வாரி வீசியிருந்த அல்லல்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு விடுதலை பெற்று வீறுடன் அவர்கள் வெளியே வந்துவிட்டனர்!

மேல்நீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதி மன்றத்திலோ நல்ல தீர்ப்பு கிடைக்காவிட்டாலுங்கூட நாம் ஆச்சரியப்பட்டிருக்க மாட்டோம், இன்றைய ஆட்சியாளரின் சட்டத்தின் போக்கு, ஒரே வழி 'ஒற்றைக் கண்ணோடு' நிலவுகிறது என்ற காரணத்தால.

இவையெல்லாம் திடாவிடர்கழகத்தினர் பயிற்சி பெறத்தக்கசோதனைக்கூடம். கூண்டில் நிறுத்தப்பட்டிருந்தபோதும், "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்ற இன்ப கீதந்தான் அவர்கள் இதய நாடிகளிலிருந்து எழும்பிக்கொண்டிருந்தது. சோதனையில் வெற்றிபெற்று மீண்ட அவர்களை வாழ்த்துகிறோம்.

●

# ★ கோலில் கறை படிந்தது! ★

—❊—

இறுதியாக அந்த இளைஞனைத் தூக்கிலிட்டுவிட்டார்கள், மலேயா அதிகார ஆணவம் படைத்தோர். ஒரு ரிவால்வாரும் ஆறு தோட்டாக்களும் வைத்திருந்தார் என்ற ஒரே குற்றத்திற்காக, மலேயாவில் வாழ இடந்தேடிச் சென்ற தோழர் எஸ். ஆர். கணபதி தூக்கிலிடப்பட்டுவிட்டார்.

ஒரு தமிழனை — தூக்கிடவேண்டிய அளவுக்குக் குற்றம் புரியாத ஒருவனை — சட்டத்திற்குக் கட்டுப்படவேண்டி, கடமையை நினைந்து வழி நடந்துகொண்டிருந்த அவனை, குற்றவாளியாகத் தூக்குமேடையில் கொண்டுபோய் நிறுத்தி, தூக்குக் கயிறு அவ்விளைஞனைக் கட்டித்தழுவும்படி செய்துவிட்டார்கள் அதிகாரவெறியர்கள்.

குற்றமேதும் செய்ய நினையாத அந்தப்பாட்டாளித் தோழனுக்குக் கருணை காட்டும்படி, செலாங்கூர் சுல்தானை நாம் வேண்டினோம் — பலர் வேண்டினார்கள்—தமிழகம் வேண்டிற்று—இந்திய அரசாங்கம் வேண்டிற்று. எனினும் மலேயா நாட்டுத் தூக்குமேடையில் ஒரு தமிழனின் உயிர் சிதைக்கப்பட்டுவிட்டது!

குற்றம் நினையாத தமிழன் தூக்குமேடையில் பிணமாக்கப்பட்டான் என்றவுடனேயே, மலேயா கோலில் கறை படிந்துவிட்டது என்பதைமட்டும் அதிகாரவெறியர்கள் மறந்துவிடவேண்டாம். கறை படிந்துகாணப்படும்அக்தக் கோலைக் காணும்போதெல்லாம், மலேயா வாழ் தமிழர்களும், தாயகத்தமிழர்களும் நெஞ்சு கொதிப்பேறி நிற்பர் என்பதுமட்டும் திண்ணம். அதன் விளைவு என்ன என்பதைக் காலங் காட்டத்தவறாது!

## ஆரிய திராவிட

4-ம் பக்கத் தொடர்ச்சி

காலத்திலிருந்தே நாகரிக வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது 'தமிழர் நாகரிகம்' என்றே சொல்லப்பட்டு வந்ததென்றும், பின்னர் தமிழ் மக்களிலிருந்து ஒரு சாரார், தெலுங்கு பேசுவோராயும், கன்னடம் பேசுவோராயும், மலையாளம் பேசுவோராயும், பிரிந்து போயினரென்றும், அப்படி அவர்கள் மொழியை வேறாக்கொண்டிருந்த போதிலும், அடிப்படைத் தமிழர் நாகரிகத்தில் சிறிதும் வேறுபடாமல் இருந்துவருகின்றனர் என்றும், அதனாலேயே 'தமிழர் நாகரிகம்' என்று தமிழர்களை மட்டும் பிரித்துக் கூறாமல், தமிழ் மக்களினின்றும் பிரிந்து போன பகுதியினரையும் சேர்த்து—அவர்களும் தங்களுடைய பழைய நாகரிகத்தை விடாமல் நடந்துவருவதால், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளைப் பேசும் அனைவருக்கும் பொதுவாகத் 'திராவிடநாகரிகம்' என்று இப்போது கூறிவருகிறோம். இதனையே தோழர் லூயி டூமோண்டும் விளக்கியிருக்கிறார். திராவிட நாகரிகம் தென்னிந்தியர் அனைவருக்கும் பொதுவானது என்று கூறியிருக்கிறார். இதிலும் மன அமைதியைப் பெறமுடியாத நிருபர், கடைசி முறையாக ஒரு கேள்வியைக் கேட்டுவிடுவது என்று துணிந்து கேட்டிருக்கிறார். அந்தக் கேள்விக்குக் கிடைத்த பதில்தான் அவருக்கு ஓரளவு திருப்தியைக் கொடுத்திருக்கும் என்று நம்புகிறோம்.

> "தென்னிந்தியாவில் உள்ள ஒரு தனி நபரையோ, ஒரு கோஷ்டியையோ ஆரியரா? திராவிடரா? என்று நிர்ணயிக்க முடியுமா?"

என்பதுதான் அந்த நிருபருடைய கடைசிக் கேள்வியாகும். இந்தக் கேள்விக்குப் பதில் கூறுவதென்றால் வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. அனுபவ அறிவு இதற்கு நிறைய வேண்டும். 'ஆரியர்—திராவிடர் கலப்பு'ப் பற்றி இதுவரை வெளிவந்த நூல்கள் பலவற்றில் ஆரியரும் திராவிடரும் பெரும்பாலும் கலந்துவிட்டனர் என்ற முடிவையே கூறியுள்ளனர். இக்கூற்று உண்மையானால், இன்று ஆரியர் வேறு, திராவிடர் வேறு என்று பிரித்துப்பேசக் காரணமே இல்லை. ஆரியமும் தமிழும் இன்னும் வெவ்வேறாக இருப்பது போலவே, ஆரியரும் திராவிடரும் வெவ்வேறாகவே இருக்கின்றனர். உடை, நடை எல்லாவற்றிலுமே ஆரியர் வேறு திராவிடர் வேறு என்று மிக எளிதாகக் கண்டுகொள்ளக்கூடிய அளவு இரு இனத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கிறது. ஆனால், ஒன்றுமட்டும் உண்மை. ஆரியரும் திராவிடரும் ஒருங்குவாழ்கின்றனர். அதாவது ஒருஇடத்தில் வாழ்கின்றனர்-ஒருதெருவில் வாழ்கின்றனர்—இன்னும் சொல்லப்போனால், ஒரு வீட்டில் கூட வாழ்கின்றனர் என்று கூடச் சொல்லலாம். என்ற போதிலும், ஆரியர்கள் ஆரியர்களாகவும், திராவிடர்கள் திராவிடர்களாகவுமே வாழ்கின்றனர். இந்த இரு இனத்துக்குமிடையே எந்த விதமான உடலுறவும் கிடையாது (சந்தர்ப்ப உடலுறவைத் தவிர)—நட்புறவு மட்டும் ஏகதேசம் உண்டு. இந்த நட்புறவும் இரத்தத் தொடர்பு கொள்ளாத முறையில்தான் இருந்து வருகிறது. டாக்டர் சுப்பராயன் அவர்களும் அன்பர் இராசகோபாலாச்சாரியாரும் போன்ற இரண்டொருவர் இரு இனங்களுக்குமிடையே இரத்தத் தொடர்பை இப்போது உண்டாக்கிக் கொண்டபோதிலும், இந்த இரத்தத் தொடர்பை இரு இனத்தாருமே வரவேற்கவும் இல்லை — இப்படிப்பட்ட இரத்தத் தொடர்பு அவசியம் என்ற போதிலும், சரியென்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. இத்தொடர்பு ஆரியர்-திராவிடரின் இரத்தக்கலப்பு ஏற்படுவது தவறாகாதென்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாகக் கூறுவதற்கே இன்னமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே, ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் நெடுநாட்களுக்கு முன்னரே ஒன்றாக்கலந்து விட்டது என்று கூற எந்த ஆதாரமும் கிடையாது.

* * *

> "எனக்குத் தெரிந்தவரையில், தங்களை ஆரியர் அல்லது திராவிடர் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய கலப்பற்ற இரத்தம் உள்ள இனம் ஒன்று இல்லை"

என்று கூறியிருக்கிறார்.

ஆரிய இரத்தம் திராவிட இரத்தத்தோடு கலந்துவிட்டதா அல்லது திராவிட இரத்தம் ஆரிய இரத்தத்தோடு கலந்துவிட்டதா என்பதல்ல இங்கு இப்போதுள்ள பிரச்னை. இரு இனத்தின் இரத்தமும் ஒன்றாகக் கலந்து எல்லோரும் ஒரே இனம் என்ற முறையில் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் நடந்து காட்டவேண்டுமென்பதை எந்தப் பகுத்தறிவுடையவரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், ஒரு இனம், தங்களை உயர்ந்தவர்கள் என்றும், தங்கள் நாகரிகமே சிறந்ததென்றும், தங்கள் மொழியே சிறப்புடையதென்றும் கூறிக்கொண்டு, மற்ற இன மக்களையும் அவர்களின் மொழி கலாச்சாரம் ஆகியவற்றையும் இழிவாகப் பேசும் போக்கையே நாம் கண்டிக்கிறோம்.— வெறுக்கிறோம். 'ஆரியராவது திராவிடராவது—ஒன்றும் இல்லை—எல்லாரும் ஒன்றாகக் கலந்துவிட்டனர்' என்று யார் வாய் வேதாந்தம் பேசுகிறார்களோ, அவர்களே, இன்றும் தங்களை ஆரியர்கள் என்றும், தங்கள் மொழியான சமஸ்கிருதமே கோயில்களிலும் பிற இடங்களிலும் முதலிடம் பெறவேண்டுமென்றும் கூறி வருவதோடு, திராவிடர்களையும் திராவிட மொழிகளையும் இழிவாகவும் பேசி வருகின்றனர். ஆரியர்களில் படித்தவர் படியாதவர் யாராயிருந்தாலும் தங்களுடைய வேதம் நான்கென்றும், அவை இருக்கு, எசுர், சாமம், அதர்வம் என்றும் கூறுகின்றனரேயன்றி, திருக்குறளையோ, சிலப்பதிகாரத்தையோ, ஏனைய தமிழ் இலக்கியங்களையோ தங்களுடைய நூல்களாக ஒப்புக்கொள்வதே கிடையாது. திருக்குறள் முதலான தனித்தமிழ் நூல்களைக் கூடச் சமஸ்கிருதத்தின் மொழி பெயர்ப்புத்தான் என்று கூறி, 'ஒன்றேயாயினும் தனித்தமிழ் நூலுண்டோ' என்று இகழ்ந்து பேசுவதைத்தான் காண்கிறோமேயன்றித், தமிழுக்கோ, தமிழ் நூல்களுக்கோ அவர்கள் சிறப்புக் கொடுப்பதும் இல்லை — அவற்றை மதிப்பதுமில்லை.

இரு இனங்களுக்குமிடையே இத்துணை வேறுபாடுகளைக் கற்பித்து வைத்துக்கொண்டு, அவற்றை நடைமுறையிலும் செய்து காட்டிக்

கொண்டு, "ஆரியர் வேறு—திராவிடர் வேறு என்று கூறுவது வெறும் பொய்க்கூச்சல்" என்று புலம்புவதில் யாதாயினும் பொருள் இருக்க முடியுமா என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

பகுத்தறிவாளர்களாகிய நாம் ஒரு இனம் இன்னொரு இனத்தோடு கலந்து வாழ்வதைக் குற்றமாகக் கருதுபவர்களல்ல. டாக்டர் சுப்பராயன் அவர்கள் கலப்பு மணம் செய்துகொண்டாரென்றால், அதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். டாக்டர் சுப்பராயன் அவர்கள் மேல்நாடுகளுக்குச் சென்று, கல்வியறிவோடு, உலக அனுபவ அறிவையும் பெற்ற காரணத்தால், கலப்பு மணம் செய்துகொள்வது சாதாரண விஷயம் என்று கருதி அவ்விதம் செய்துகொண்டார் என்றே நாம் கருதுகிறோம். இத்தகைய கலப்பு மணம் பகுத்தறிவாளருக்கு மகிழ்ச்சியையும், வைதிகர்களுக்கு மருட்சியையும் தருகிறது. இதற்குக் காரணம் என்ன? இரு இனங்களுடையவும் சமுதாய அடிப்படை அமைப்பு முறைதானே இதற்குக் காரணம்! அந்த அளவுக்கு இரண்டு இனங்களும் பிரிந்து இருக்கிறதென்பதைத்தானே பகுத்தறிவாளர்களின் மகிழ்ச்சியும், வைதிகர்களின் மருட்சியும் எடுத்துக் காட்டுகின்றன!

மேல்நாடுகளில், ஒரு பிரெஞ்சுக்காரன், ஒருஆங்கிலப் பெண்ணையோ, அல்லது ஒரு ஆங்கிலேயன் ஒரு பிரஞ்சுப் பெண்ணையோ மணந்து கொண்டால், அங்கு, அது ஒரு சாதாரண விஷயமாகவே கொள்ளப்படுகிறது. ஆனால், இங்கு, அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஆச்சரியத்தையும் மருட்சியையும் கொடுக்கிறது. அங்கு அப்படியும் இங்கு இப்படியும் ஏன் இருக்கிறது என்பதனையும், எதனால் இந்த நிலை ஏற்படுகிறது என்பதனையும் தோழர் ஹூயிடுமோண்ட் போன்றோர் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது.

டாக்டர் சுப்பராயன் அவர்களின் கலப்பு மணமுறை, பச்சைநிற மயில்களில் ஒரு வெள்ளை நிற மயில் காணப்படுவது போலவும், பழுப்பும் வெண்மையும் கலந்து காணப்படும் புலிகளில் ஒரு கரும்புலி காணப்படுவது போலவுமான ஒரு நிகழ்ச்சியேயன்றி இதில் வேறொன்றுமில்லை. மயில்களில் ஒன்று வெள்ளை நிறமாக இருப்பதாலேயே எல்லா மயில்களையும் வெள்ளைநிறமென்று கூறிவிட முடியுமா? புலிகளில் ஒன்று கறுப்பு நிறமாய் இருப்பதாலேயே புலிகள் எல்லாமே கறுப்பு நிறம் தான் என்று கூறிவிட முடியுமா? அதுபோலவே டாக்டர் சுப்பராயன் போன்ற சிலர் கலப்புமணம் செய்துகொண்டதாலேயே இங்குள்ள அனைவரும் இரத்தக்கலப்புக் கொண்டுவிட்டனர் என்று கூறிவிடமுடியுமா? எனவேதான் இத்தகைய நிகழ்ச்சிகளை உதாரணமாக வைத்துக் கொண்டு, ஆரியருக்கும் திராவிடருக்கும் இரத்தக்கலப்பு ஏற்பட்டுவிட்டதென்று கூறிவிட முடியாதென்கிறோம். ஆனால் இரத்தக் கலப்பு ஏற்படுவதைத் தவறு என்று நாம் கருதுபவர்களல்ல.

இந்தக் கேள்விக்கு விடை கூறிய தோழர் ஹூயிடுமோண்ட் அவர்கள்,

> "எனக்குத் தெரிந்தவரையில், தங்களை ஆரியர் அல்லது திராவிடர் என்று சொல்லிக்கொள்ளக் கூடிய கலப்பற்ற இரத்தம் உள்ள இனம் ஒன்று இல்லை"

என்று கூறியிருக்கிறார். அவர் கூறுகிறபடி, அவர் தெரிந்த அளவில், அவரால் படிக்கப்பட்ட நூல்களில், ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் ஒன்றாகக்கலந்து விட்டதென்று காணப்படுவதாலேயே, அவர் அதை முற்றிலும் நம்பாமல் எனக்குத் தெரிந்தவரையில் என்று சந்தேகத்துடனேயே கூறியிருக்கிறார். ஆனால், இந்தச் சந்தேகமும் அவருக்கு விரைவில் நீங்கிவிடும் என்று நம்புகிறோம். எப்படியென்றால், தோழர் ஹூயிடுமோண்ட் அவர்கள், இங்கு ஓராண்டு தங்கியிருந்து, தமிழ் நாட்டுக் கிராமம் ஒன்றில் மக்களின் இன்றைய வாழ்க்கை முறையை ஆராயப் போகிறாராம். இந்த ஆராய்ச்சியின் பயனை அவர் பல உண்மைகளை அறிந்துகொள்ள வழி ஏற்படுமென்றும் நம்புகிறோம்.

ஐரோப்பாவில் உள்ள மக்கள் பெரும்பாலும் மதம், கலை, நாகரிகம் முதலியவற்றில் ஒன்றாக இருந்த போதிலும், அங்குள்ள யூதர்கள் என்ற ஒரு இனத்தாரை மட்டும் தங்களுக்குப் புறம்பானவர்களாக மதித்து, அவர்களை விலக்கிவைத்திருக்கும் சம்பவம் ஒரு வேளை தோழர் ஹூயிடுமோண்டுக்கு மறந்து போயிருந்தாலும், தமிழ் நாட்டுக் கிராம வாழ்க்கையில் அவர் செய்ய இருக்கும் ஆராய்ச்சி, அதனை அவருடைய நினைவுக்குக் கொண்டு வராமற் போகாது. அப்போது ஆரிய இரத்தமும் திராவிட இரத்தமும் இங்கு எந்த அளவுக்குக் கலந்துவிட்டிருக்கிறதென்ற உண்மையும் அவருக்குப் புலப்படும். ஒரு இனம் இன்னொரு இனத்தோடு இரத்தக் கலப்புக் கொண்டு விட்டது என்று வைத்துக்கொண்டாலும், (அப்படி ஏற்படுவது தவறல்ல) அந்த இரு இனங்களும் மொழி, கலை, நாகரிகம், நடை, உடை, உணவு, ஆகிய எல்லாத் துறைகளிலும் ஒன்றாகக் கொன்று தொடர்பு கொள்ள முடியாத நிலையிலேயே இன்னும் இருந்து வருகின்றன என்ற உண்மையையும் அவர் நடத்த இருக்கும் கிராமவாழ்க்கை ஆராய்ச்சி கண்ணாடிபோல் எடுத்துக்காட்டும் என்றும் நம்புகிறோம்.

தோழர் ஹூயிடுமோண்ட் அவர்கள் ஓர் ஆராய்ச்சியாளர். மனித இன நூல் ஆராய்ச்சி நிபுணர். அப்படிப்பட்ட ஒருவரால், இங்குள்ள ஆரியர்களும் திராவிடர்களும் இரத்தக் கலப்பால் ஒன்றாய்விட்டனர் என்று

**ஏழை—பணக்காரரின் வியாபாரம்!**

"அரசு, அமைதியாக, நிரந்தரமானதாக நிலைபெற வேண்டுமானால், மிதமிஞ்சிய செல்வமும், மிதமிஞ்சிய ஏழ்மையும் இருத்தலாகாது. அதாவது பணக்காரனும் இருக்கக் கூடாது, ஏழையும் இருக்கக் கூடாது. ஏனெனில் இருவரும் பொதுமக்கள் நன்மைக்கு மாறுபட்டவர்கள். பணக்காரர்கள் கொடுங்கோலர்கள்; ஏழைகள் அந்தக் கொடுங்கோலர்களுக்கு நண்பர்களாயிருக்கிறார்கள். இந்த இரண்டு வகையினர்க்கும் இடையில்தான், பொதுமக்கள் சுதந்திரம் ஏலம் போடப்படுகிறது. ஒரு சாரார், அதாவது பணக்காரர்கள் அதனை வாங்குகிறார்கள்; இன்னொரு சாரார் அதாவது ஏழைகள் அதனை விற்கிறார்கள்."

—ரூசோ.

கூறப்படும்போது, இவ்விரு இனங்களுக்குமிடையே எல்லாத்துறைகளிலும் பெருத்த வேறுபாடுகள் இருப்பதற்குரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை உணரமுடியாது என்று நாம் கருதவில்லை. பிரஞ்சு நாட்டுக்காரராகிய லூயிடுமோண்ட் தன்னை ஒரு பிரஞ்சுக்காரன் என்றே சொல்லிக்கொள்கிறார். கலை நாகரிகம் ஆகியவற்றில் தம்மையொத்த ஆங்கிலேயனையோ, ஜெர்மானியனையோ நம்மவன் என்று சொல்லிக்கொள்ளமாட்டார். காரணம், தன்னுடைய நாடு, தன்னுடைய இனம் என்ற உரிமையும்பற்றுதலும்அவருக்குஇருப்பதேயாகும். ஆனால்,இங்குள்ள ஆரியர்களுடையவும் திராவிடர்களுடையவும் நிலைஅப்படியல்லவே! இவர்களுடைய மொழி, கலை, நாகரிகம் முதலான அனைத்துமே ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டனவாகும். இந்த உண்மையையும் தோழர் லூயிடுமோண்ட் தாம் செய்ய இருக்கும் ஆராய்ச்சியால் அறிந்துகொள்ளமுடியும் என்றுநம்புகிறோம். என்றாலும் அவருக்கு ஒரு யோசனைகூறவிரும்புகிறோம். அதாவது, அவர் தம்முடைய ஆராய்ச்சிக்காகத்தேர்ந்தெடுக்கும் கிராமத்தை, ஆரியர்களும் திராவிடர்களும் ஒருங்கு கலந்துவாழும் கிராமமாகப் பார்த்து, அங்கிருந்து தம்முடைய ஆராய்ச்சியை நடத்துவாரானால், அப்போது, அவருக்கு, ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் உள்ள வேற்றுமைகள் இன்னின்னவென்பதும், அவ்வேற்றுமைகள் எதனால்—எப்படி உண்டாயின என்பதும்தெரிந்துகொள்ளமுடியும்.

* * *

தோழர் லூயிடுமோண்ட் அவர்களைப் பேட்டிகண்ட "தினமணி" நிருபரின் செய்திகளை அந்தப் பத்திரிகை தலைப்புக்கொடுத்து வெளியிட்டிருக்கும்முறை அறிவுடையவர்களால் வெறுக்கக்கூடிய மாதிரியில் அமைந்திருக்கிறது. லூயிடுமோண்ட் பலமுக்கியமான உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். அவற்றிற்கெல்லாம் முக்யத்துவம் கொடுத்து நடுநிலை திறம்பாது உண்மையை வெளியிட அந்தப்பத்திரிகைக்கு மனம்வரவில்லை. மிகச்சாதாரணமான—முக்கியத்துவம் அற்ற ஒன்றைப் பிரமாதப்படுத்தித் தலைப்புக் கொடுத்து வெளியிட்டிருக்கிறது. லூயிடுமோண்ட்,

"தமிழ்மொழி ஒன்றுதான் பூர்விகமொழி"

என்றும்,

"திராவிடர் கலாச்சாரமே முதன்மை வாய்ந்தது"

என்றும்,

"தமிழில் பிறமொழிச் சொற்களைச்சேர்ப்பது அவசியமில்லை"

என்றும்,

"வால்மீக இராமாயணகாலத்து அகத்தியருக்கும் தமிழுக்கும் தொடர்பில்லை"

என்றும்,

"இராமாயணம், ஆதய் ஈவ் கதைபோன்ற கற்பனைக்கதை"

என்றும் கூறியிருக்கிறார். இவற்றில் ஒன்றுக்குக்கூட முதன்மை கொடுத்து அச்செய்தியைப் பிரசுரிக்க வேண்டும் என்று அந்தப் பத்திரிகை நினைக்கவேயில்லை. இப்படிச் செய்யவேண்டுமென்றுகூட நாம் கூறவில்லை. பொதுவாக, லூயிடுமோண்ட் கூறிய கருத்துக்களைத் தொகுத்து,

"ஆரியர் — திராவிடர் பற்றி லூயிடுமோண்ட் கருத்து அல்லது விளக்கம்"

என்று தலைப்புக்கொடுத்துவெளியிட்டிருக்கலாம். அங்ஙனமன்றி, ஆரியரும் திராவிடரும் இரத்தக்கலப்புக் கொண்டவர்களே என்ற செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, வெளியிட்டிருக்கும் முறை ஒன்றே போதுமே, ஆரியர் திராவிடர் என்ற வேற்றுமையை விளக்கி, இரு இனங்களுக்குமிடையே உள்ள பிணைக்க முடியாத பிளவை எடுத்துக்காட்ட! லூயிடுமோண்ட் போன்ற ஆராய்ச்சியாளர் இந்த உண்மையைக்கூட கண்டுகொள்ள மாட்டார்கள்என்ற கருத்தழிவு இங்குள்ள சிலருக்கு இருக்குமானால், அதற்கு நாம் என்ன செய்யமுடியும்!

நம்முடைய நாட்டில் நெடுங்காலமாகவே ஒருபழக்கம் இருந்து வருகிறது. அதாவது, நம்முடைய சொந்த விஷயங்களைக்கூட வெளியாரிடமிருந்து கேட்டுத்தெரிந்துகொள்வது என்பது. வெளியார் கூறினால்தான்,அதுஉண்மையென்றும், ஆதாரபூர்வமாக ஒப்புக்கொள்ளக்கூடியதென்றும் கருதும் பழக்கம் நம்மவர்களிடையே குடி கொண்டுவிட்டது. இது எவ்வளவு தவறென்பதைஇவர்கள் உணர்வதேயில்லை. "நேற்று எங்கள் வீட்டில் என்ன சமைக்கப்பட்டது" என்று அடுத்த வீட்டுக்காரனை ஒருவன் கேட்டால், அதற்கவன், "கத்தரிக்காயாக இருக்கலாம் அல்லது புடலங்காயாகஇருக்கலாம்" என்று தன்வீட்டுச் சமையலை மனதில் வைத்துக்கொண்டு கூறுவது போல், வெளிநாட்டாரும் தங்களுடைய ஏகதேச அனுபவத்தையும் அறிவையும் வைத்துக்கொண்டு பதில் கூறிவிடுகின்றனர். அவற்றில் சில உண்மையாகவும் சில உண்மையற்றதாகவும் இருக்கும். இவ்விதம் அவர்கள் கூறுவதிலிருந்து, அவர்கள்வேண்டுமென்றே ஒன்றை உண்மையென்றும் இன்னொன்றைப் பொய் என்றும்கூறுவதாகப்பொருள் கொண்டுவிடக்கூடாது. அவர்களுக்கு அந்தப்பழக்கம் பெரும்பா

### மதத்திற்கு மாறான செயல்!

சில ஆண்டுகளுக்கு முன்பு பூனா நகரசபைத் தலைவர் தெருக்கூட்டுகிற முறையில் ஒரு புதிய சீர்திருத்தம் கொண்டுவந்தாராம். அதாவது, தெருக்கூட்டுகிறவர்கள் குனிந்துகொண்டே கூட்டவேண்டியதான ஒரு குட்டையான விளக்குமாற்றால் கூட்டிக் கொண்டிருந்ததற்கு பதிலாக நின்றுகொண்டே கூட்டும்படியான மாதிரியில் நீளமான காம்புள்ள, ஒரு நெட்டை விளக்குமாற்றைக் கொடுத்து அதனைக் கூட்டும்படி கூறினாராம். அத்தெருக்கூட்டிகள் அந்த நெட்டை விளக்குமாற்றை எடுத்துக் கொள்ள மாட்டோமென்று சொல்லிவிட்டார்களாம். அதற்கு அந்தச் சேர்மன் காரணங்கேட்டபோது, நெட்டை விளக்குமாற்றால் கூட்டும் வழக்கம் தங்களுக்குக் கிடையாதென்றும், இன்று புதிதாய் மாற்றமுடியாது என்றும் சொல்லியதோடு, கட்டாயப்படுத்தினால் அது தங்கள் மதத்திற்கு மாறான செயலாதலால், வேலையையாவது விட்டுவிடுவோமே யொழிய நெட்டை விளக்குமாற்றைத் தொடமாட்டோம் என்று சொல்லிவிட்டார்களாம்.

லும் கிடையாது. நம்மவரில் சிலரைப் போல், அவர்கள் தங்களை "எல்லாம் தெரிந்த மேதாவிகள்" என்று காட்டிக்கொள்வதும் இல்லை. இப்போது இங்கு வந்திருக்கும் தோழர் லூயி டுமோண்ட்கூடத் தாம் ஒருமனித இன நூல் ஆராய்ச்சியாளனேயன்றிச், சரித்திர ஆராய்ச்சி நிபுணரல்ல என்று உண்மையைக் கூறியிருக்கிறார். என்றபோதிலும் இங்குள்ள சில "மேதாவிகள்" அவரிடமிருந்து சரித்திர சம்பந்தமான உண்மைகளை அறிந்துகொள்ள அரும்பாடுபடுகின்றனர். சரித்திர ஆராய்ச்சியில் அனுபவம் இல்லாத தோழர் லூயி அவர்களிடம் மொகஞ்சதாரோ நாகரிகத்தைப்பற்றியும், திராவிட நாகரிகத்தைப்பற்றியும் கேள்விகள் கேட்டு, அவரை அவதிப்படுத்தியிருக்கிறார் "தினமணி" நிருபர்.

தம்முடைய நாட்டைப் பற்றிய உண்மைகளைத் தம்முடைய நாட்டிலுள்ள அறிவாளிகளிடமிருந்தே தெரிந்துகொள்ள வேண்டுமென்ற முறை, எதையும் வெளியாரிடமிருந்து தெரிந்துகொள்வதுதான் சரி என்ற பழக்கத்தால் ஏற்பட்ட தவறென்றுவைத்துக்கொண்டாலும், ஒருவர், ஒருகுறிப்பிட்ட விஷயத்தைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாதென்று கூறிய பின்னரும், அதுபற்றி அவரை வற்புறுத்திக் கேட்பது போன்ற கெடுமதி வேறொன்றும் இல்லையென்றே கூறலாம்.

'தினமணி' நிருபர் திராவிட நாகரிகம் பற்றிக் கேட்ட கேள்விக்குத் தோழர் லூயிடுமோண்ட் கூறிய பதிலில் ஏகதேசம் உண்மையிருந்தாலும், அத்துறையில் அவர் சரியானபடி ஆராய்ச்சி செய்யாததால், அவருக்குத் தெரிந்தவரையில் உண்மையை மறைக்காமலே கூறியிருக்கிறார். ஆனால், திராவிட நாகரிகத்தைப் பற்றி நம் நாட்டு அறிஞர்களில் ஒருவரான தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள், தோழர் லூயிடுமோண்ட் திராவிட நாகரிகத்தைப்பற்றித் 'தினமணி' நிருபரிடம் கூறிய அதே நாளில், அதாவது 18—4—49-ல் திருச்சியில், எழுத்தாளர் கடமை என்ற தலைப்பில் பேசிய பொழுது,

"ஆரிய நாகரிகத்திற்கு முன் திராவிட நாகரிகம் இந்நாடு முழுதிலும் மட்டு மன்றி, மொசப்பட்டோமியா, ஈரான் போன்ற நாடுகள் வரை பரவியிருந்தது"

என்று கூறித், திராவிட நாகரிகத்தின் தொன்மையையும் சிறப்பையும் விளக்கியிருக்கிறார். இது, தோழர் லூயி அவர்கள் கூறிய 'தமிழர் நாகரிகம்' என்பதற்கு ஓர் மறுப்புப் போல் காணப்பட்டாலும், இருவர் கூறியதிலும் உண்மை இருக்கிறது. அதாவது, தோழர் டுமோண்ட் கூறியது, சரியான சரித்திர ஆராய்ச்சி செய்யாததால் ஏற்பட்ட சிக்கல் என்பதும், தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் கூறியது, சரித்திர ஆராய்ச்சியைச் சரியாகச் செய்துகூறிய தெளிவான விளக்கம் என்பதும் தெரியக் கிடக்கின்றன. எனவே, நம்முடைய விஷயங்களை, நம்மில் தெரிந்தவர்களிடம் கேட்டால் தான் உண்மையை முறையாகத் தெரிந்து கொள்ள முடியுமென்று கூறுகின்றோம்.

### எடுத்துச் சொல்வோர் இல்லை.

"பணக்காரர்கள், தங்கள் லாபத்தில் நாலில் ஒன்று, மூன்றிலொன்று, பாதி, இன்னும் அதிகமாகவேகூட வருமான வரி கொடுக்கிறதாகவும் அடிக்கடி நினைவுபடுத்துகிறார்கள். ஆனால், ஏழைகளோ, தங்கள் கூலியை அப்படியே வாடகையாகக் கொடுத்துவிட வேண்டியதாயிருப்பதுடன், தாங்கள் சுதந்திரமாக இருந்தால் எவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்குமோ அதனினும் இரண்டொரு மடங்கு நாள்தோறும் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கிறதே என்பதை எடுத்துச்சொல்வோர் யாருமில்லை."

— பர்னாட்ஷா.

திராவிட நாகரிகமே மிகவும் பழைமையானது என்பதை மேலும் வலியுறுத்த விரும்பிய தோழர் சண்முகம் அவர்கள்,

"அரசியல் நிலை காரணமாகத் 'திராவிட' என்ற சொல் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம், அதற்காகப் பழைமையான வரலாற்றை அறியாமல் கண்ணை மூடிக்கொள்ள முடியாது"

என்று கூறித் திராவிட நாகரிகத்தின் தொன்மையையும் சிறப்பையும், அது குறித்து ஐயப்படுவோருக்கும், அருவருப்புக் கொள்வோருக்கும் தெளிவுண்டாகும் முறையில் விளக்கியிருக்கிறார். தோழர் சண்முகம் அவர்களின் இந்த ஆராய்ச்சி, 'தினமணி' நிருபர் போன்ற சந்தேகப் பேர்வழிகளுக்குத் தெளிவையும், தோழர் லூயிடுமோண்ட் போன்ற ஆராய்ச்சியாளர்களுக்கு விளக்கத்தையும் தருவதற்குப் பெரிதும் பயன்படுமென்று நம்புகிறோம்.

✻

## மறைவு.

காஞ்சிபுரம் தோழர் ம. த. சாமிநாதன் அவர்கள் சிறிது காலமாகவே நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்திவிட்டார் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். மறைந்த தோழர் சாமிநாதன் அவர்கள், பொது நலத் தொண்டில் பெரிதும் பங்குகொண்டவர். காஞ்சிபுரம் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருமுறை பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நலம் பல புரிந்திருக்கிறார். விரோதிகளையும் நட்பினராக்கிக் கொள்ளும் ஒரு சிறந்த பண்பு இவரிடம் உண்டு. அனைவருக்கும் கட்டாயக் கல்வி முறையை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்பது இவருடைய கொள்கைளில் ஒன்றாக இருந்தது.

மொழிப்பற்றும்; இனப்பற்றும் பொதுநல மனப்பான்மையும் கொண்ட ஒரு பெரியாரைக் காஞ்சிபுரம் இழந்துவிட்டது.

இவருடைய பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆறுதல் மொழி உரித்தாகுக.

✻

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.